
# சிவதொண்டன்

## தவத்திரு
## செல்லத்துரை சுவாமிகள்



நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய
அடியார்களின் வெளியீடு

உ
சிவமயம்

# சிவதொண்டன்
## தவத்திரு
# செல்லத்துரை சுவாமிகள்

# Sivathondan
## Thavaththiru
# SELLATHURAI SWAMIGAL



நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய
அடியார்களின் வெளியீடு
2018

# நூல் விபரம்

**நூலின் தலைப்பு:** சிவதொண்டன் தவத்திரு செல்லத்துரை சுவாமிகள்

**முதற்பதிப்பு** : 31 ஒக்ரோபர், 2018

**பதிப்புரிமை** : வெளியீட்டாளர்களுக்கு

**வெளியீடு** : நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலய அடியார்கள்

**பக்கங்கள்** : 55 + ii

**பதிப்பகம்** : ஜே. எஸ். பிறிண்டேர்ஸ், பண்டத்தரிப்பு.

உ
சிவமயம்

# சிவதொண்டன்
# தவத்திரு
# செல்லத்துரை சுவாமிகள்

**தவமும் தவமுடையார்க்கு ஆகும்** என்பது நாம் அறிந்த வாசகம். இம்மண்ணில் மானிடராகப் பிறந்தோர்க்கு இறையருள் சித்திப்பதும், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வாழ்வின் பயனைத் துய்ப்பதும் அவ்வாறே ஆகும். அவனருளாலே அவன்தாள் வணங்கி ஆத்ம ஈடேற்றம் பெற்றவர்கள் பலரைப் பற்றி நாம் அறிந்துள்ளோம். அவர்களுள் சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள் தமிழர் மரபில் சித்தர்கள் என அழைக்கப்பட்டனர். அகத்தியர் முதலான பதினெண் சித்தர்கள் பற்றியும், அவர்களின் அடிச்சுவட்டில் காலங்கள் தோறும் தோன்றிச் செயற்பட்டவர்கள் பற்றியும் நூல்கள் பலவும் விதந்து போற்றியுள்ளன. எமது ஈழ நாட்டிலும் சித்தர் பரம்பரையொன்று அறாத் தொடர்புடன் உருவாகி நிலைபெற்று நிற்பதற்கு இந்தியாவின் கர்நாடக மாநிலத்திலிருந்து வந்த கடையிற் சுவாமிகள் கால்கோளிட்டார். அவரின் வழியில் செல்லப்பா சுவாமிகளும், அவரைக் குருவாகக் கொண்டு யோகர் சுவாமிகளும் ஆன்மீக தரிசனங்களால் உலகம் உய்யப் பேரருள் புரிந்தனர். யோகர் சுவாமிகளின் அணுக்கத் தொண்டராகவும், அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆன்மீக ஒளியூட்டப் பெற்றவராகவும், அவரது திருவடி தீண்டப் பெற்ற பெரும்பேறு பெற்றுய்ந்தவராகவும், யோகர் சுவாமிகள் தொடக்கி வைத்த சிவதொண்டன் நிலையத்தைப் பரிபாலித்து வந்தவராகவும், அரைநூற்றாண்டு காலம் சிவதொண்டன் திருவருள் நிலையங்களுடனும், தமது குருவின் சிந்தனைகளுடனும் வாழ்வினை இணைத்துக் கொண்டவராகவும் விளங்கியவர்தான் தவத்திரு செல்லத்துரை சுவாமிகள் (07.04.1914 – 12.04.2006) ஆவார்.

## அறிமுகம்



செல்லத்துரை சுவாமிகளின் இளமைத்தோற்றம்

நீர்வேலிக் கிராமத்தவரான சின்னத்தம்பி அருணாசலம் என்பவருக்கும், சரசாலைப் பதியினராகிய கந்தையா கதிராசிப்பிள்ளை (நல்லபிள்ளை) என்பவருக்கும் மூத்த புதல்வனாகச் சரசாலையூரினில் பிறந்தவர் செல்லத்துரை சுவாமிகள். இவரையடுத்து இரு ஆண் சகோதரர்களும் பிறந்தனர். குடும்பமானது விவசாயத் தொழிலையே பொருளாதார வருமானத்துக்குரியதாகக் கருதியதால் தந்தையாரின் ஊரில் வசிக்க வேண்டிய தேவை இருந்தது. அங்கிருந்தே கல்வி முயற்சிகளிலும் ஈடுபட்டார் சுவாமிகள். ஆரம்பக்கல்வி நீர்வேலி அத்தியார் இந்துப் பாடசாலையில் நிறைவு பெற்றது. இடைநிலைக் கல்வியானது எஸ்.எஸ்.சி வரை அயலிலுள்ள கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கிட்டியது. படிப்பில் முதல் மாணவராகவும், விளையாட்டில் ஆர்வமுடையவராகவும், ஆசிரியர்களிடம் அன்பு காட்டுபவராகவும், அவர்களால் பாராட்டப்படுபவராகவும், ஒழுக்க விழுமியங்களைத் தவறாமல் கடைப்பிடிப்பவராகவும் இளமைப் பருவத்துச் செல்லத்துரை சுவாமியின் குணநலன்கள் சிறந்து காணப்பட்டன. "விளையும் பயிரை முளையில் தெரியும்" என்பதற்கு இலக்கணமாக அப்போது அவர் விளங்கினாலும், ஆன்மீகப் பேரொளியில் கலந்துவிடும் அவரது உள்மன ஆற்றல் பற்றி எவரும் அறிந்திருக்கவில்லை. அவரும் உணர்ந்திருப்பாரோ தெரியாது. சராசரி இளைஞனாகப் பிரகாசித்தார். ஆனந்தம்பிள்ளை எனச் செல்லமாக உறவினரால் அழைக்கப்பட்டார். தந்தையின் விவசாயத் தொழிலுக்கும் துணை செய்தார். அயலவர்கள், ஊரவர்கள், உறவினர்கள் யாவரையும் நேசித்தார். தம்பிமாரை

அரவணைத்தார். பெற்றோரைப் பேணினார். அக் காலத்தில் ஆசிரியத் தொழிலில் சேர்வதென்றால் புகுமுகப் பரீட்சை யில் தேறியதும், ஈராண்டு காலம் ஆசிரிய கலாசாலைப் பயிற்சியைப் பெறவேண்டும். அதற்கமைவாக *1938 – 1939* காலப்பகுதியில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றுக்கொண்டார் செல்லத்துரை சுவாமிகள். அங்கே குரு கவி வே.மகாலிங்கசிவம் அவர்களிடம் தமிழைக் கற்றுக் கொள்ளக்கூடிய பெருவாய்ப்பும் அவருக்குக் கிட்டியது.



**அத்தியார் இந்துவின் இன்றைய தோற்றம்**



**கிறிஸ்தவக் கல்லூரியின் இன்றைய தோற்றம்**




**கோப்பாய் ஆசிரிய கலாசாலை**

## ஆசிரியப்பணி

இதன் பின்னர் தமது *26*வது வயதில் பயிற்சி பெற்ற அரசாங்க ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். *1940* ஆம் ஆண்டு தொடங்கிய ஆசிரியப் பணியானது *1965* ஆம் ஆண்டுவரை கால் நூற்றாண்டு காலம் நீடித்தது. முதல் நியமனம் மேல்மாகாணத்தில் கிடைத்தது. கொழும்பிலும் அதனை அண்டிய பாடசாலைகளிலும் பணிபுரிந்த பிற்பாடு, தென்மாகாணத்தின் திக்வெல, வடமத்திய மாகாணத்தின் பொலநறுவையைச் சேர்ந்த முஸ்லீம் கிராமமாகிய தம் பாளை, கண்டியை அடுத்துள்ள மல்வானை, நுவரெலியாப் பகுதியின் இராகலை முதலான இடங்களிலுள்ள பாடசாலைகளில் செல்லத்துரை சுவாமிகளின் ஆசிரியத்

துவப் பணி மேன்மை பெற்றது. தான்கற்பித்த பாடசாலைகளில் இயன்றவரை விடுமுறை எடுக்காமல் கருமமே கண்ணாக இருந்தார். அப்படி விடுமுறை எடுக்க வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டபோது ஆன்மீக சிந்தனையுடன் சம்பளமற்ற விடுமுறையை மேற்கொண்டார்.



இறாகலை தமிழ் மகாவித்தியாலயம்



நாவற்குழி மகாவித்தியாலயம்


கொழும்பில் கற்பித்த காலத்தில் மருதானையில் இயங்கிய கதிர்காமத் தொண்டர்சபை உறுப்பினராய் இருந்ததுடன், யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காம தரிசனத்துக்காக வருவோரை உபசரித்து அனுப்பும் கைங்கர்யத்திலும் ஈடுபட்டார். திக்குவெல்லையில் பணிபுரிந்த காலத்தில் வார இறுதி நாட்களைக் கதிர்காமத் தவக்காலமாகக் கழித்தார். திஸ்ஸமகாராமையில் பஸ்ஸிலிருந்து இறங்கிக் கால்நடையாகவே கதிர்காமத் திருத்தலத்திற்குச் சென்றார். அப்போது ஒருமுறை வழியில் புலிக்குப் பயந்து நின்ற பசுக் கூட்டத்தினைக் கண்டு ஆன்மபலம் கைவரப் பெற்றவராகத் தான்முன்செல்லப் பசுக்களைப் பின்வருமாறு அழைத்துச் சென்றார். பாடசாலைத் தவணை விடுமுறை நாட்களைப் பெரும்பாலும் கதிர்காமத்திலேயே தவமாகக் கழித்தார். செல்வச் சந்நிதி, நல்லூர் முதலான முருக தலங்களுக்கும் விடுமுறைக் காலங்களில் அடிக்கடி செல்வார். சந்நிதி ஆலயத்தின் தென்புறத்திலுள்ள சாதுக்கள் தங்குமிடத்தில் உறைவார். ஆற்றுநீரில் முழுகிய பின் பூவரச மரநிழலில் அமர்ந்து தியானத்திலிருப்பார்.

தம்பாளை முஸ்லீம் கிராமப் பாடசாலையில் கற்பிக்கும்போது இளைஞரொருவர் கலையேறப் பட்டவராய் ஆவேசங் கொண்டு நின்றபோது கதிர்காமத்து விபூதி


கொடுத்து அவரது ஆவேசத்தைத் தணித்தார். ஹோமியோபதி முறையிலான சிகிச்சையை நோயுற்ற ஊரவர்க்கு வழங்கிச் சுகப்படுத்தினார். தம்பாளை மக்கள் நல்லதொரு கறவைப் பசுவைச் செல்லத்துரை சுவாமிகளுக்குப் பாலுக்காக அன்பளிப்பாக வழங்கித் தமது நன்றிக்கடனைச் செலுத்தினரெனக் கூறப்படுகிறது. ஆசிரியர் சேவையிலிருக்கும்போது தலைமை ஆசிரியராகப் பதவியுயர்த்தப்பட்டு இறாகலைப் பாடசாலையில் பணியை மேற்கொள்ளலானார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானுடன் அங்கு இருக்கையில் நல்லுறவை வளர்த்துக் கொண்டதுடன், தான் பொறுப்பேற்கும்போது நூறு மாணவர்களுடன் இருந்த பாடசாலையை எழுநூறு மாணவர்கள் கொண்டதாகவும், பல்வேறு வளங்கள் நிறைந்ததாகவும் மாற்றியமைத்துவிட்டு இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் திரும்பினார். குறித்த பாடசாலையின் பொன்விழாக் கொண்டாட்டத்தின்போது செல்லத்துரை சுவாமிகளை அழைத்துப் பாடசாலைச் சமூகம் பாராட்டிக் கௌரவித்துக் கொண்டது. 1940 – 1954 வரையுள்ள 14 ஆண்டுகள் இலங்கையின் பல பகுதிகளிலும் ஆசிரியராக, தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த பின்னர் 1954 ஆனி உத்தரத்தின் பின்னர் நாவற்குழிப் பாடசாலையின் தலைமை ஆசிரியராக இடமாற்றம் பெற்று வந்தார். 1965 இல் தமது 51 வயதில் தாமாக விரும்பி ஓய்வு பெறும்வரை அங்கேயே அரிய பணியாற்றினார். ஆன்மீக நாட்டம் அதிகரிக்க, அதிகரிக்க உலகப் பற்றுக்களினின்றும் மெல்ல மெல்ல விடுபடத் தொடங்கினார். செல்லத்துரை சுவாமிகளை யோகர் சுவாமிகள் என்னும் அருள்மகாசக்தி வழிப்படுத்தி வந்தது. அந்த அன்பு வலையில், அருள் வலையில் இவர் அகப்பட்டுக் கொண்டார். சற்குருவான யோகரின் ஆற்றுகையில் செயற்படத் தொடங்கினார்.

கொழும்பில் கற்பித்த காலத்தில்தான் யோகர் சுவாமிகளை முதன்முதலில் தரிசிக்கும்பேறு செல்லத்துரை சுவாமிகளுக்குக் கிடைத்தது. அது 1940களை அண்டிய காலமாகும். ஹவ்லொக் டவுன் தபாலதிபராயிருந்த இராமலிங்கம் என்பவரது விடுதியில் அந்த அரிய சந்திப்பு

நிகழ்ந்தது. அப்போது செல்லத்துரை சுவாமிகளுக்கு முப்பதை நெருங்கிய வயதிருக்கும். மகாத்மா காந்தியடிகளின் சுயராஜ்ஜிய இயக்கத்தால் கவரப்பட்டிருந்தார். அந்த இயக்கப் பணிகளுக்காக இந்தியா செல்லவும் விருப்பம் கொண்டிருந்தார். இந்நிலையிற்றான் யோகர் சுவாமிகளின் முதல் தரிசனம் கிட்டியது. **தம்பிமாரே உத்தியோகத்தை மாத்திரம் விட்டுவிடாதீர்கள்** எனக் கூறியதுடன் செல்லத்துரை இளைஞனின் கையைத்தொட்டு **தம்பி நல்லாயிருப்பாய், போயிற்று வா** எனவும் அருளிச் செய்தார் யோகமுனி. தன்முன் நிற்பவரின் உள்ளத்து உணர்வுகளை உற்றறிந்து, நோய்க்கு மருந்தாகத் தவயோகர் உரைத்த அருள் வாசகங்கள் செல்லத்துரை என்னும் ஆன்மீகத் தேடலுக்குரிய ஆத்மாவைப் பதினைந்து ஆண்டுகளாக வளர்த்தெடுத்து நிலைநிற்கச் செய்தது.



நல்லூர் முருகன் ஆலயம் பழைய தோற்றம்



கதிர்காமக் கந்தன் ஆலயம் பழைய தோற்றம்



செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் புதிய தோற்றம்

செல்லத்துரை சுவாமிகள் தென்னிலங்கையில் கற்பிக்கையில் பாடசாலை விடுமுறை நாட்களைப் பெரும் பாலும் கதிர்காமத்தில் தவக்காலமாகக் கழித்தாலும், செல்வச்சந்நிதி, நல்லூர் ஆகிய தலங்களுக்கும் சென்று தியானித்திருப்பதை நியமமாகக் கொண்டிருந்தார். கதிர் காமத்தில் ஏற்பட்டது போலவே சில ஆன்மீக அனுபவங்கள் செல்வச் சந்நிதியிலும் அவருக்கு ஏற்பட்டன. ஒரு சமயம் “கடவுள் என்பதெல்லாம் மூதாதையர் பேணிவந்த ஒரு வழக்கம்தானோ?” என்றதோர் வினா உள்ளத்தில் எழுந்தது. அதனைத் தெளிந்து கொள்வதற்காகத் தமது அருகில் நோயினால் துடித்துக் கொண்டிருந்த வருத்தக்காரருக்கு சந்நிதித் தீர்த்தத்தைக் கொடுப்போமெனக் கருதினார். தீர்த்தம் உண்டபின் நோய் தணிந்தால் அது கடவுள் பற்றிய நம்பிக்கையையும், உண்மையையும் தெளிந்து கொள்வதற் கான அனுபவமாகிவிடுமென நம்பினார். உடனடியாகவே பிள்ளையார் சந்நிதியிலுள்ள தீர்த்தக் குளத்திலிறங்கி சிறிது தீர்த்தம் எடுத்துச் சென்று அந்த நோயாளி பருகக் கொடுத்தாராம். சிறிது நேரத்தில் நோய் நீங்கப்பெற்ற அம்மனிதர், சுவாமிகளின் கால்களைப் பிடித்துக்கொண்டு ‘தெய்வம்போல வந்து எனது நோயினைத் தீர்த்து விட்டீர்கள்’ என அழுதாராம்.

செல்லத்துரை சுவாமிகளின் சந்நிதிச் சாதனைகளில் ஐந்து இடங்கள் முக்கியத்துவம் பெற்று விளங்கின. கோயிலுக்கு அயலில் தென்புறமாக இருந்த சாதுக்கள் உறையுமிடம், ஆனந்தாச்சிரமம், சந்நிதித் தீர்த்தம், பூவரச மரத்தடி, சந்நிதியான் திருமுன்னிலை ஆகியவைகளே அவ்விடங்களாகும். அக்காலத்தில் சந்நிதியின் தென்புற மாகச் சாதுக்கள் உறையும் கொட்டில்கள் பல இருந்தன. அவற்றுள் ஒரு கொட்டிலில் சுவாமிகள் தங்கியிருந்து ஆன்ம விசாரணைகளில் உள்ளத்தை ஓடவிடுவார். பல்வேறு படிநிலைகளில் காணப்படும் சாதுக்களுடன் உறவாடி மகிழ்வார். வேம்பு, நாவல், அடர்ந்த பனங்காடு, சிறு புதர்கள் என்றவாறு சூழ்ந்திருக்கும் அந்த அமைதியான இடம் அவரது அகமுகமான தேடுதலுக்கு ஏற்றதாயிருந்தது. பூவரசமர நிழலில், ஏகாந்தமாகவிருந்து தியானத்தை மேற்கொள்வார். சோளகக் காற்று பனையோலைகளில் எழுப்பும் ஓமெனும்

இசையொலியைக் குதிரைகொண்டு ஏறித் திரிவது போன்ற தான கனவில் மிதப்பார். கந்தரனுபூதிப் பாடல்களை மனதில் நினைத்து உருகுவார். தம்முடன் ரமணாச்சிரமத் தொடர்பு கொண்ட, ஆனந்தாச்சிரமத்துப் பெரியவருடன் பகவானைப் பற்றியும், இறையடியார்கள், அனுபூதி நூல்கள் பற்றியும் உரையாடுவார். அன்னதானமளிக்கும் அவ்விடம் மௌனமா யிருந்து ஆத்மீகத் தேடல்களில் ஈடுபடுவதற்கு ஏற்றதாயிருந் தது. ஆற்றங்கரையமர்ந்த ஆறுமுகனின் ஆறானது, செல்லத்துரை சுவாமிகள் நீந்தவும், முழுகவும் ஆனந்த மளித்தது. இறையுணர்வு மீதூரப் பெற்றவராக ஆச்சிரமத்துப் பிள்ளைகளுடன் நடுஆறுவரை சென்று நீந்தும்போது, இறைவனின் பேரின்பப் பெருவெள்ளத்துள் நீந்துகின்ற பெருங்கருணைபோல உணர்ந்து கொண்டார். பிள்ளையார் கோயில் தீர்த்தம் உடல் நோயையும், உள்ளத்து நோயையும் நீக்கவல்ல அற்புதத்தை அனுபவ ரீதியாகத் தெரிந்து கொண்டார். ஒருமுறை யோகர் சுவாமிகள் செல்லத்துரை சுவாமிகளைச் சந்நிதிக்கு அழைத்துச் சென்றபோது பூவரச மரத்தடியைச் சுட்டிக்காட்டி, **இவ்விடத்தில் கால்வைக்க இடமில்லாதவண்ணம் சிவலிங்கங்கள் நிறைந்துள்ளன** எனக் கூறியிருந்தார். அந்நினைவை மேற்கொண்டு சந்நிதிக்குச் செல்லும் வேளைகளிலெல்லாம் அந்தப் பூவரச மரத்தடியில் சிறிது நேரம் தங்கியிருந்து தியானம் செய்வதை வழக்கமாய்க் கொண்டிருந்தார். மேலும் சந்நிதிப் பெருமான் திருமுன்னர் பாடிப்பரவி, தியானத்தமர்ந்து, பரவசமுற்றுத் திளைக்கும் பேறுடையவராய்க் காணப்பட்டார். அட்டாங்க நமஸ்காரம் செய்வார்; பிரதட்டை செய்வார். தமது ஆச்சிரமம் வரும் அடியவரைச் சந்நிதிக்குச் சென்றுவருமாறு ஆற்றுப் படுத்துவார்.

## தென்னிந்தியத் திருத்தல யாத்திரை

செல்லத்துரை சுவாமிகளின் தென்னிந்தியத் திருத்தல யாத்திரையானது அவர் ஆசிரிய சேவையில் இணைந்துகொண்ட 1940 ஆம் ஆண்டில் தொடங்கியது. அவ்வாண்டு மார்கழி விடுமுறையின்போது சிதம்பர தரிசனம், ஆனந்தக்கூத்து ஆகியவற்றைக் கண்டுகளித்தார்; உள்ளம் குளிர்ந்தார். சிவகாமியம்மை மண்டபத்தின் சிற்ப அழகைக்

கண்டு மகிழ்ந்தபின் பிள்ளையார் சந்நிதிக்கு வந்தபோது அம்மையார் ஒருவர் மோதகப் பிரசாதம் அளித்தார். சிவகாமியன்னையின் அருட்பிரசாதமே அதுவெனக் கருதியவர், ஆருத்திரா தரிசனத்தையும் சிதம்பரத்தில் கண்டு இன்புற்றார். ஐந்தொழில்களின் தத்துவத்தை உணர்த்தும் ஆடல் வல்லானாகிய சிவபிரானின் ஆனந்தக் கூத்தில் திளைத்தமனம், திருவண்ணாமலை செல்ல விரும்பியது. அங்கு சென்று ரமண மகரிஷி சந்நிதியில் மோன நிலையில் இருந்தார். சுவாமிகளின் இந்தியத் தலயாத்திரை 1940 இல் தொடங்கி 1954 ஆம் ஆண்டு அவர் சிவதொண்டன் திருவருள் நிலையத்தில் உறையும்வரை தொடர்ச்சியாக வருடந்தோறும் நீடித்தது. அந்த யாத்திரையில் சிதம்பரமும், திருவண்ணாமலையும் முக்கிய இடம் வகித்தன. சிதம் பரத்தை அண்டிய பல தலங்களுக்கு கால்நடையாகவே சென்றார். அங்கெல்லாம் ஓரிரு நாட்கள் உறைந்தார். அவர் தம்முடன் கூடவே எடுத்துச்செல்லும் பையொன்றினுள் உடுப்புகள், தேவாரம் அடங்கன்முறை, பெரியபுராணம், வேறுசில புத்தகங்கள் மாத்திரம் காணப்படும். திருவாரூர்த் தியாகேசப் பெருமானை வழிபட்டபின் திருவாரூரைச் **சிவம் மணக்கும் வீதி** என்பார். ஆச்சாள்புரம் முதலான சிறிய கோவில்களுடன் திருவானைக்காவல், காஞ்சி, திருக் காளத்தி போன்ற தெய்வத் திருத்தலங்களுக்கும் சென்று வழிபட்டார். நேபாள நாட்டின் பனிமலைச் சரிவுகளூடாக ஒடுங்கிய பாதையில், குளிரில் நடுங்கியபடி நடந்து சென்றார். வட இந்தியச் சாதுக்கள் பற்றிக் கண்ணியப்படுத்தும் மனநிலை கொண்டிருந்தார்.

அன்பின் வலைதனில் அகப்படும் இறைவன் செல்லத்துரை சுவாமிகளுக்கு எப்போதும் துணை நின்றருளி னான். தில்லை தீட்சிதர்கள், திருவாரூர் ஐயர்கள், திருச் செந்திற்பதி போற்றிமார்கள் முதலான அர்ச்சகர்கள் சுவாமிகளுக்குப் பழக்கமாயிருந்தனர். மூலட்டானம் வரை சென்று மூலட்டானேஸ்வரரைத் துதிக்கவும், வணங்கவும் துணைநின்றனர். சிதம்பரம் தருமபூசணம் இரத்தினசாமிச் செட்டியாரும் அவரது புதல்வர்களும் சுவாமிகளை ஆதரித் தனர். பேராசிரியர் வெள்ளை வாரணார், அருணை வடிவேலு

முதலியார், வச்சிரவேலு முதலியார் போன்ற சைவ நூற் புலமையாளர்கள் சுவாமிகளின் நட்புக்குரியவர்களானார் கள். செல்லத்துரை சுவாமிகள் பாடுதுறை ஒழிவிலொடுக்கம், தேவிகாலோத்திரம் முதலான அரிய ஞானநூல்களை எழுத்தெண்ணி வாசிப்பதுடன், பாதுகாத்தும் வந்துள்ளார்.



தில்லைச் சிதம்பரம் ஆலயம்



திருவண்ணாமலை ஆலயம்

1954 இல் சிதம்பர ஆனி உத்தரத்திற்குத் தயாரான போது இறாகலைப் பாடசாலையிலிருந்து யாழ்ப்பாணத் துக்கு இடமாற்றம் கோரி விண்ணப்பித்து விட்டுச் சென்றார். சிதம்பர தரிசனம் செய்த பின்னர் உத்தர தரிசனத்தினைத் தொடர்ந்து திருவண்ணாமலை ரமணாச்சிரமம் சென்றார். அப்போது யோகர் சுவாமிகளின் நினைவு வந்தது. அவருடன் அண்டி வாழ்வது கஷ்டம் என அவர் கேள்விப் பட்ட கதைகள் கூறினபடியால், வடக்கை நாடி இமயமலை செல்ல விரும்பினார். அங்கு சென்றால் ரிஷிகளின் திருவடிகளில் அமைதிகண்டு ஆறுதல் அடையலாம் என நம்பினார். வடஇந்திய யாத்திரையின்போது சுவாமிகளுடன் ஆத்ம ஜோதி நா.முத்தையா அவர்களும் இணைந்துகொண்டார். இருவரும் திருக்கேதாரத்தில் ஓர் அறை எடுத்துத் தங்கியிருந்தனர். என்னே! ஆச்சரியம், அந்த அறையில் சுவாமிகளின்முன் யோகர் சுவாமிகள் நேரடியாகத் தோன்றி னார். அவரைக்கண்டு உள்ளங் குளிர்ந்தபோது, ***Come Home Imediatly*** (வீட்டிற்கு உடனே வா) என ஆங்கிலத்தில் கூறக் கேட்டார். அப்போதே வீடு திரும்ப ஆயத்தமானார். இறைவன் தமது அடியவர் பலரைத் தடுத்தாட்கொண்டமை பற்றி நாம் அறிந்துள்ளோம். இங்கு யோகர் சுவாமிகள் குருவாகத் தோன்றிச் செல்லத்துரை சுவாமிகளை மீண்டும் கல்விப் பணியிலீடுபடவும், சிவப்பணியில் திளைக்கவும்

ஆற்றுப்படுத்தினார் என நம்புவோம்.

வீட்டிற்கு வந்ததும் இடமாற்றக் கடிதம் வந்திருந்தது. அதன்படி செல்லத்துரை சுவாமிகள் 1955 சனவரியில் நாவற்குழி அரசினர் பாடசாலைத் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். யோகர் பெருமானைத் தரிசிக்கக் கொழும்புத்துறை ஆச்சிரமம் சென்றார். உள்ளத்தில் ஒருபொழுதும் காணாத அமைதி கிட்டியது. திரும்பி வருகையில் **சிவதொண்டனுக்கு நல்ல ஆள்** என்று யோகர் முனி தம் முன்னிருந்த அன்பர்க்குக் கூறுவது கேட்டது. இருநாட்களின்பின் நாவற்குழிப் பாடசாலையின் முன் யோகர் சுவாமிகளின் குரல் கேட்டது. அதுகேட்டு ஓடிவந்த செல்லத்துரை சுவாமிகளிடம், காரிலிருந்தபடியே அதில் ஏறும்படி பணித்தார் யோகர்சுவாமி. **உன்னை இன்று கவிழ்த்துக் கொட்டிவிடப் போகிறேன்** எனச் சிரித்தபடி கூறி அழைத்துச் சென்றார். சிவதொண்டன் வாயிலில் கார் நின்றதும் இறங்குமாறு கூறி, **உத்தியோகத்துடன் நிலையத்தையும் பார்த்துக்கொள்** எனப் பணித்தார். யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையில் கே.கே.எஸ். வீதியின் கிழக்குப் புறமாக 1953 நவம்பர் மாதத்தில் யோக முனிவரால் உருவாக்கப்பட்ட திருவருள் இல்லம்தான் சிவதொண்டன் நிலையமாகும். யோகர் சுவாமிகளின் அன்பர்களும், அடியவர்களுமாகிய பொருள்நலம் மிகுந்தோரின் பொருளுதவிகளாலேயே சிவதொண்டன் நிலையமும் அதன் சிவப்பணிகளும் விரிவாக்கம் பெற்றன. இன்றுவரையில் இந்நிலையப் பணிகளின் முன்னேற்றத்துக்குக் கொடுக்கின்ற சிந்தையுடைய பொருள் இருக்கின்ற வள்ளன்மைகளே காரணமாக அமைந்துள்ளன. இனி யோகர் சுவாமிகள் என்னும் ஆன்மீக வழிகாட்டியாகிய காந்தமானது, செல்லத்துரை சுவாமிகளாகிய இரும்பினைக் கவர்ந்ததும், கருணை காட்டியதும், நெறிப்படுத்தியதுமான வரலாற்றினை நோக்குவோம்.

## யோகர் சுவாமிகளின் அருள்வலையில்

கடையிற்சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள் போன்று சித்து விளையாட்டுகளை யோகர் சுவாமிகள் அதிகம் செய்து காட்டியதில்லை. அரச ஊழியர் பணி செய்தபின், மானிட

வாழ்வினூடாக ஆத்ம தரிசனம் பெற்று, இறையனுபவங் களால் உண்மையான மனிதர்களை உருவாக்க விழைந்தவர் அவர். கதிர்காமத்திலும், நல்லூரிலும் ஒரே சமயத்தில் காட்சி தந்தமை, செல்லத்துரை சுவாமிகளை வட இந்தியாவில் சந்தித்து வீடு திரும்புமாறு மானசீகமாகத் தோன்றி அழைப்பு விடுத்தமை முதலானவைகள் பற்றியும் நாம் அறிந்துள் ளோம். இருப்பினும் ஆயிரத்தில் ஒருவர் கூடத் தவச்சுவை நாடி வருகிறார்கள் இல்லையே என்று அவர் அடிக்கடி கூறிக் கொள்வாராம்.



தவத்திரு யோகர் சுவாமிகள்

1954 ஆம் ஆண்டின் முற்பகுதியில் தமது 40 வது வயதில் சிவதொண்டன் நிலையம் சேர்ந்த செல்லத்துரை சுவாமிகளுக்குத் தொடர்ந்து ஐந்தாறு ஆண்டுகள் பெரும் தவவேள்விக் காலமாய் அமைந்தது. நவநவமான அருள் வாக்குகளான மந்திரங்களை யோகர் சுவாமிகள் அவருக்கு அருளிச் செய்தார். நாள்தோறும் சிவதொண்டன் நிலைய வாயிலில் வந்து நின்று வேண்டியதைச் சொல்லிச் செல்வார். அடிக்கடி யோகர் சவாமிகளின் கொழும்புத்துறைக் கொட்டிலுக்குச் சென்று அவரைத் தரிசனம் செய்வார் செல்லத்துரை சுவாமிகள். அத்துடன் தமது குருவை

வீதிகள், சந்திகள், வண்ணைச் சிவன்கோயிலுக்கருகிலுள்ள எஸ்.ஆர்.கடை ஆகிய இடங்களிலும் தரிசிப்பார். சிலவேளை யோகர் சுவாமி தமது சீடரைக் காரிலேற்றி, அங்குமிங்கும் ஆட்டி அலைத்து, நிலைய வாசலில் இறக்கியும் செல்வார். இந்த வேளைகளில் தமது குரு ஈந்த வாக்கியப் பிரசாதங்கள், அருளாரமுதுகள், ஏச்சுக்கள் யாவும் தவ வேள்விக்குரிய அவி பாகங்களாகவும், அதில் சொரியப்படும் நெய்யாகவும் செல்லத்துரை சுவாமிகளைப் பக்குவப்படுத்தின. குருவைக் காணுதல், குருவின் சொற்கேட்டல், குருவின் திருமேனி தீண்டல் போன்றவை இறையனுபவங்களாகும் எனத் திருமந்திரம் நூல் கூறுவதைப் புரிந்துணர்ந்து கொண்டார் செல்லத்துரை சுவாமிகள். **நீ பகலில் உபாத்தியாயர்; நான் இரவில் உபாத்தியாயர்** எனக் கூறும் குருவின் வார்த்தைகள் அவரை வழிநடத்திச் சென்றன. பகலில் ஆசிரியப் பணியைக் குறைவில்லாது நிறைவேற்றி முடிந்தபின் பாடசாலையை விட்டு வெளியேறி, சிவதொண்டன் இல்லம் வருவார்; பாடசாலைக்குரிய உடுப்புக்களைக் களைந்து போடுவார்; உடற்றூய்மை செய்வார்; வழிபாட்டில் ஈடுபடுவார்; பின் பல்வேறு தொண்டுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வார். இது அன்றாடப் பணிகளாக அவரிடம் காணப்பட்டன.

செல்லத்துரை சுவாமிகள் திங்கள் தோறும் வெளிவரும் **சிவதொண்டன்** ஏட்டுக்குக் கட்டுரைகள், கவிதைகள் எழுதுவார். நீண்ட நேரம் இரவில் விழித்திருந்து நூல்களை வாசிப்பார். அதிகாலை ஒருமணிக்குத் துயிலெழுந்து உடற் சுத்தம் செய்து, திருநீறணிந்து தியானத்திலீடுபடுவார். தினந் தோறும் தியானத்தில் ஈடுபடும்படி அவரது குருநாதர் வலியுறுத்தியதுடன், எப்படித் தியானத்தின்போது அமர்ந்திருக்க வேண்டுமென்பதையும் ஏற்கெனவெ செய்து காட்டியுமிருந் தார். எல்லா விதங்களிலும் செல்லத்துரை சுவாமிகளின் உள்ளத்தில் உறைந்தார் யோகர் சுவாமிகள். இனி அதி காலை ஐந்து மணிக்கே எழவேண்டும் எனக் குருநாதர் கூறும் வரை ஒருமணிக்குத் துயிலெழும் வழக்கத்தைச் செல்லத் துரை சுவாமிகள் கைவிடவில்லை. பிறரறியாத இந்த ரகசியத்தை, தமது ஆத்மீக அனுபவத்தைக் கட்டுரைகளில் எழுதிவந்தார். சிவசிந்தனைப் பாடல்களையும் அவ்வப் போது எழுதினார்.

**ஆரறிவா ரெல்லாம் அகன்ற நெறியருளும்**

**பேரறி வாளன் திரு**

என்னும் திருவருட்பயனுக்கேற்ப, யோகர் சுவாமிகள் செல்லத்துரைச் சீடரிடம் காட்டிய அருள் சொல்லுந் தரமன்று, அவர்பால் நிகழ்த்திய லீலைகளும் பலவுண்டு. “வல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்ல வல்ல” என்பதுபோல் அவர்பால் நடத்திய பரிசோதனை களும் ஏராளம். யாவும் செல்லத்துரை சுவாமிகளைப் பக்குவப்படுத்தின. பாடசாலை முடிந்து வரும்வழியில் ஒருநாள் சுவாமிகள் காரில் வந்து முன்நின்றார். **இப்பொழுது மட்டக்களப்புக்குப் போகலாமோ?** என்றார். **ஓம் சுவாமி** என்பதே சீடரின் பதிலாகவிருந்தது. செல்லத்துரை சுவாமிகளைக் காரிலேற்றிப் புகையிரத நிலையத்தில் இறக்கி விட்டார். புகையிரதச் சீட்டு, உடுப்பு, உணவுப்பொதி ஆகிய வற்றையும் கொடுத்தார். இப்படி எத்தனையோ அனுபவங் கள். சிவதொண்டனில் சேர்ந்த சில நாட்களில் சுவாமிகள் ஒரு பொதியினைச் சீடர் கையில் நீட்டி **இது நான் உனக்குத் தரும் பொக்கிசம்; கவனமாகப் பேணிவா** எனக் கொடுத்தார். அதனைப் பிரித்துப் பார்த்தபோது *Serpent Power* என்ற அரிய ஆங்கில நூலின் நீண்ட முகவுரையின் தமிழ் மொழிபெயர்ப்பு அதுவாக இருந்தது. அம்மொழிபெயர்ப்பினைத் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமையுள்ள சுவாமிகளின் அடியவர் குழுவொன்று **குண்டலினி சக்தி** என மொழிபெயர்த்திருந்தது. முதற்சில பக்கங்கள் கையெழுத் திலும், ஏனையவை தட்டெழுத்திலும் பொறிக்கப்பட்டி ருந்தன. கனதியான அட்டையிடப்பட்டுக் கட்டப்பட்டிருந்தது. இந்நூலுடன் ஆங்கில மூல நூலையும் வாங்கிப்படித்து வரலாயினார் செல்லத்துரை சுவாமிகள். ஒருநாள் யோகர் முனி செல்லத்துரை சுவாமிகளிடம் **குண்டலினி சக்தியைக் கவனமாகப்படி** என்று கூறியதுடன், **நூலில் ஒன்றுமில்லை; எல்லாம் இங்கே (உடம்பைச் சுட்டிக்காட்டி) உள்ளது** எனவும் கூறியிருந்தார். உள்நின்று உணர்த்துதல் என்பது இதுவாக அமைந்தது. யோக சாதனையில் ஈடுபட்டு வரும்போது **யோகநெறி** என்னும் 28 செய்யுட்களையுடைய நீண்ட பாடலை அருளினார் யோகர் சுவாமிகள். குண்டலினி

சக்தியின் பிழிவாக அமைந்த இப்பாடல்களின் முற்பகுதி யோகநெறி நுட்பங்களையும், பிற்பகுதி பூசனை மாட்சியை யும் உன்னத ஞானத்தையும் பற்றியதாகும்.

திருவெம்பாவைக் காலத்தில் வழமைபோன்று சிதம்பர தரிசனத்துக்குச் செல்லாது இம்முறை (சிவ தொண்டன் நிலையத்துக்கு வந்த பின்னர்) கொழும்புத்துறை சென்று தமது குருவானவரைத் தரிசிக்க விரும்பினார் செல்லத்துரை சுவாமிகள். ஆனால் அங்கு சென்றபோது யோக முனிவர் பூநகரி சென்றது அறிந்து, அங்கு சென்று, வல்லிபுரம் ஆசிரியர் வீட்டுத் திண்ணையில் உலாவிக் கொண்டிருக்கும் சுவாமிகளைக் கண்டார். வந்தவர்களைக் கண்ட யோகர் சுவாமி **உங்களை ஆர் இங்கு வரச் சொன்னது?** எனக் கூறுதலும் எதிரே விழுந்து அவரை வணங்கினார் செல்லத்துரை சுவாமிகள். பின்னர் தோடம்பழப் பையை அவரிடம் கொடுத்தார். கோபக் கோலத்துடன் அதனை வாங்கிய சுவாமி, **சிவதொண்டனில் இருத்திவைத்தால் அங்கிங்கென்று ஏன் அலைவது? பிடிக்குப்பிடி நெய்விடுவது தானா? இங்கு நிற்கப்படாது. இப்பொழுதே போய்விட வெண்டும்** என்று கூறி ஏசலானார்.

ஒருநாள் யோகர் சுவாமிமுன் அமர்ந்திருக்கையில் செல்லத்துரை சுவாமியின் மனதில் ஓர் எண்ணம் உதித்தது. ஏற்கெனவே ரமணாச்சிரம சாதுக்களுடன் **அருணாசல அட்சர மணமாலை** பாடியின்புற்றதும், மலைவலத்தின் போது அதனை ஓதியோதி உன்மத்தனாய் வந்ததும் நினைவுக்குவர, அதுபோன்றதோர் பாடலைச் சுவாமிகளும் பாடியருள்வரேல் என்று நினைத்தார். உடனே சுவாமிகள் ஒரு பாடல் வருகிறது; எழுதிக்கொள் எனச் சொல்லத் தொடங்கினார். **கடவுளை எங்கும் கண்டு களிப்பார் மெய்யடியார்கள் ஓம்** எனத் தொடங்கிப் பாடல்கள் பெருகியது. **எளிதாய் எவர்க்கும் இன்னுரை சொல்வார் எழிலார் சிவத்தொண்டன் ஓம்** என்பதுவரை பாடி நிறுத்திவிட்டு மிகுதியைப் பாடி முடித்துவிடு என்றார். **சந்தம் பெருகும் பாடல் பாடுவர் சாமி சிவத்தொண்டன் ஓம்** எனும் இரு அடிகளையும் பாடி நிறைவு செய்தார் செல்லத்துரை சுவாமி. இவ்வரிகளும் இணைந்த தாகப் பாடலானது **நற்சிந்தனை** முதற்பதிப்பில் வெளிவந்த

தாயினும், சுவாமிகள் வாக்கில் பிறர் வாக்குக் கலக்கக் கூடாது என்பதற்காக அடுத்த பதிப்பில் கீழுள்ள இரு அடிகளும் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இன்னொரு தடவை சிவதொண்டன் நிலைய வாயிலில் நின்று செல்லத்துரைச் சீடருக்குச் சில சொற்கள் கூறியபின் கூட வந்தவரிடம் **உபாத்தியாயருக்கு இன்னும் சந்தேகம் தீரவில்லை** என்றார் யோகர் சுவாமி. அதற்கு **ஓம் சுவாமி** என்றார் செல்லத்துரை சுவாமி. பாம்பின்கால் பாம்பறியும் என்பது இதைத்தானோ?

## ரமண மகரிஷியின் சமாதி வேளையில்



ஆச்சிரமத்தில் ரமண மகரிஷி பக்தர்களுடன்



திருவண்ணாமலை ரமணாச்சிரமம்

மல்வானையில் படிப்பித்த காலத்தில் பாடசாலை முடிந்ததும் படிக்கட்டில் ஏகாந்தமாய் அமர்ந்திருந்தார் செல்லத்துரை சுவாமி. அப்போது ரமணமகரிஷியின் பார்வை தம்மீது பதிந்தமை நினைவுக்குவர ஒரு மணித்தியாலம் அப்படியே அசைவற்றிருந்தார். இதுவே தமது முதலாவது தியான அனுபவம் எனக் கூறியிருக்கிறார். ரமண மகரிஷியின் சமாதிவேளை பற்றி அவரது அன்பர்கள் பலர் குறிப்புணர்ந் தனர். இறாகலையில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய செல்லத்துரை சுவாமிகளுக்கும் குறிப்புத் தோற்றியது. உடனே திருவண்ணாமலைக்குப் புறப்பட்டார். தற்காலத்தில் உள்ளதுபோன்று அப்போது இந்தியா செல்வதற்கான விசாக் கெடுபிடிகள் இருக்கவில்லை. பகவானின் சமாதி வேளையில் அங்கிருந்தார். அவ்வேளையில் மலையின் வடக்குப்

பக்கமாகச் சென்ற ஒளிக்கீற்றினைப் பலரையும்போல் தாமும் பார்த்து அதிசயித்தார். பகவான் ரமணரே தமது குருவென உள்ளத்தில் தீர்மானித்துக் கொண்டார். இப்போதும் அந்த எண்ணம் உள்ளத்தில் உறைந்து ஒளித்திருந்தது. அன்றிரவே யோகர் பெருமான் செல்லத்துரை சுவாமிகளின் தியான வேளையில் தோன்றி ஐயம் நீக்கினார். இதனை **மருந்து கண்டேனே** என்னும் நற்சிந்தனைப் பாடலடிகளால் அனுபவித்துப் பாடினார். ரமணரிஷியையும் யோகர் சுவாமிகளிலேயே காணும் பக்குவம் பெற்றார். அது போல் செல்லப்பா சுவாமிகளையும் யோகர் முனியிடத்தே கண்டு தெளிந்தார். ரமணர், செல்லப்பர், யோகர் ஆகிய மூவரும் சேர்ந்த மூர்த்தமாக, ஒரே வடிவாகத் தமது குருவாகிய யோகர் சுவாமியைக் கண்டின்புற்றார் செல்லத்துரை சுவாமிகள்.

## செல்லப்பா சுவாமிகள்



தவத்திரு செல்லப்பா சுவாமிகள்

செல்லப்பா சுவாமிகள் பற்றிப் பல கதைகளைத் தமது சீடருக்கு யோகர் சுவாமி கூறியிருக்கிறார். தானும், செல்லப்பா சுவாமிகளும் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம் சென்று பொங்கலிட்டு வந்ததும், பொங்கல் பானையை அப்படியே விட்டுவிட்டு வருவார் செல்லப்பா சுவாமிகள் என்று இரு கண்களும் நீர்ததும்பப் பாடுவார். ஒருமுறை செல்லப்பா சுவாமிகளது குருபூசைக்குச் சென்று வரும்போது செல்லத்துரை சுவாமிகளின் முன் எதிர்ப்பட்ட யோகர் சுவாமி விரலொன்றை உயர்த்திக்காட்டி **ஒன்று**

**ஒன்றில் நிற்க வேண்டும்** என அழுத்தியுரைத்தார். அன்றிலிருந்து **எண்ணேன் பிறதெய்வம்** என்று யோகர் சுவாமிகளை மாத்திரம் கண்கண்ட தெய்வமாக நினைத்து வணங்கிப் பணிசெய்தார் செல்லத்துரை சுவாமி. தமது குருவுக்கு ஒருநாள் தேநீர் போட்டுக் கொடுத்தார். அதைப் பருகிய யோகமுனி பிறௌனனோடு (அவருடன் கிளிநொச்சி யில் பணிபுரிந்த வெள்ளையர்) பருகிய தேநீர் மாதிரி இருக்கிறது எனப் பாராட்டினார். அதேபோல் எஸ்.ஆர் கடையிலிருக்கும்போது ஒருமுறை மழைநீரில் சாதம் சமைத்தால் சுவையாக இருக்குமெனக் கூறியதைக் கேட்டு, மழைநீரைச் சேமித்து நெல்லி விறகில் அமுது செய்து கொடுத்தார். செல்லத்துரை சுவாமிகள் சமையல் செய்வதில் தேர்ச்சி பெற்றவர். செல்லத்துரை சுவாமிகள் சிவ தொண்டன் நிலையத்துக்கு வந்து சேர்ந்த புதிதில் யோகர் சுவாமிகளுடன் இருபது, முப்பது வருடங்களாகப் பழகிய வர்கள், பரந்த நூற் பழக்கமுள்ளவர்கள், அந்தஸ்து மிக்கவர் கள், தொண்டுறுதி நிறைந்தவர்கள் என்றவாறு பலரும் சிவதொண்டன் நிலையத்தில் இணைந்திருந்தனர். இவர் நேற்று வந்தவர்தானே எனக் கருதியும் சிலர் நடந்து கொண்டனர். ஆனால் சுவாமிகளோ தமது குறிக்கோளை மாத்திரம் கருத்தில்கொண்டு அனைவரையும் அரவணைத்து நடந்து கொண்டார். தத்துவமேதை டாக்டர் எஸ்.ராதா கிருஷ்ணனின் ஆங்கில மொழி நூலான **பகவத் கீதை**யைப் படித்தின்புற்ற சுவாமிகள், அதனை மூலத்தில் படிக்கும் ஆவலினால் சமஸ்கிருதம் பயின்றார். கீதையுடன் **ஈசோப நிடதம்** ஆகியவற்றையும் படித்து உணர்ந்து கொண்டார். இவற்றையெல்லாம் தமிழில் மொழி பெயர்த்து **சிவ தொண்டன்** ஏட்டில் எழுதி வந்தார். இவற்றுடன் ஆங்காங்கே யோகர் சுவாமிகள் அருள் வாக்குக்களையும் சேர்த்துக் கொண்டார்.

## சிவதொண்டன் ஏடு




சிவதொண்டன் பத்திரிகை

**சிவதொண்டன்** திங்கள் ஏடு 01.01.1935 முதல் யோகர் சுவாமிகளால் தொடங்கப்பெற்றது. இரண்டாம் உலக யுத்தம் நடைபெற்றபோது ஓராண்டு காலம் மட்டும் அவ்வேடு வெளிவரவில்லை. 2006 சனவரியில் அதன் எழுபதாவது ஆண்டுமலர் வெளிவந்தது. இன்று 82 ஆண்டுகள் அதற்குரிய வயதாகியுள்ளது. தகைமையாளர்களைக் கொண்டு ஆன் மீகக் கட்டுரைகளை யோகர்சுவாமி அதில் எழுதுவித்தார். பல விடயங்கள் பற்றித் தாமே தலைப்புக்களைக் கொடுத்து எழுதச் செய்தார். முதலாம் ஆண்டின் மூன்றாவது இதழ் தொடக்கம் சுவாமிகளின் **நற்சிந்தனை**யும் தொடர்ந்து **சிவதொண்டனில்** வெளிவந்தது. சிலவாண்டுகள் அட்டை இல்லாமல் வெளிவந்ததாயினும், பின்னர் தோரண முகப்புப் போன்ற திருமுறைப் பாடல் பொதித்த மங்களப் போர்வையுடன் வெளியானது. **எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவார் ஈசன்** என்னும் மகுட வாசகம் மேலட்டையில் பொலிவுற விளங்குகிறது. தமிழுடன் ஆங்கிலத்திலும் சில பக்கங்களைக் கொண்டதாக வெளிவரும் ஏட்டில் நற்சிந்தனை, கட்டுரைகள், சிவசிந்தனைப் பாடல்கள், தலையங்கம், வரலாறு எனப் பன்முகப் பரிமாணங்கள் காலங்கள் தோறும் வெளிப்பட்டு நிற்கின்றன. சிவதொண் டன் நிலையத்தில் சேர்ந்த நாட்தொடக்கம் **சிவதொண்டன்** ஏட்டின் பொறுப்பையும் செல்லத்துரை சுவாமிகள் ஏற்றுச் செவ்வையாய் நடத்தி வந்தார்.

## சிவதொண்டன் நிலையப் பணிகள்



செல்லத்துரை சுவாமிகள்



சிவதொண்டன் நிலையம் - யாழ்ப்பாணம்

சிவதொண்டன் நிலையத்துப் புராண மண்டபத்தில் வார இறுதி நாட்களில் சித்தாந்த வகுப்புக்களைநடத்தி வந்தார் செல்லத்துரை சுவாமிகள். தமது குருநாதரின் அணுக்கத் தொண்டர்கள் பலரது உறவும் அவருக்குக் கிட்டியது. புகையிரத நிலைய அதிபராயிருந்த வினாசித்தம்பி அவர்கள், யோகர் சுவாமிகள் தம் கைப்பட எழுதியவற்றை யும், சுவாமி சொல்லச் சொல்லத் தாம் எழுதியவற்றையும் கொண்ட அப்பியாசக் கொப்பியை அவரிடம் கொடுத்தார். அதேபோன்று வேறு சிலரும் தம் நினைவுக் குறிப்புகளைக் கொடுத்தனர். சிவதொண்டன் நிலையம் தியானம், வழிபாடு, **சிவதொண்டன்** ஏட்டுக்கான எழுத்துப்பணி, சித்தாந்த வகுப்புகள், யோகர் சுவாமியின் அடியார்கள் கூட்டுறவு என விரிவாக்கம் பெற்றது. நிலையத்தில் சேர்ந்த காலம் முதலாக யோகர் பெருமானின் சமாதிக்காலம் வரையுள்ள சுமார் பத்து ஆண்டுகளும் *(1954 - 1964)* செல்லத்துரை சுவாமிகளைப் பலவேறு சோதனைகளாலும், அனுபவ தரிசனங்களாலும், பக்குவப்படுத்தி நின்றார் குருநாதர். ஒருமுறை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெற்ற எஸ்.எஸ்.சி பரீட்சைக்கு மேற்பார்வையாளராகச் சென்றிருந்தார் செல்லத்துரை சுவாமிகள். அப்போது அக்கல்லூரி அதிபரா யிருந்தவர் கந்தசுவாமி என்னும் யோகர் சுவாமி அடியார்.

அவர் தம்முடன் தங்குவதை செல்லத்துரை சுவாமி விரும்பினார். கந்தசுவாமி அதிபர் வெள்ளிக்கிழமை மாலை சுவாமிகளுடன் வந்து கூடியிருந்து திங்கட்கிழமை காலை செல்வார். பலவாண்டுகள் இப்படியிருந்தார். ஒருநாள் பாடசாலை செல்லும் வழியில் கொழும்புத்துறை சென்று சுவாமிகளைத் தரிசித்துச் செல்ல செல்லத்துரை சுவாமி விரும்பினார். தமது குருவின் திருவடிகளில் விழுந்து வணங்கச் செல்கையில் குருநாதரோ **நாவற்குழி செல்லும் வரை கும்பிட்டுச் செல்** என அருளிச் செய்தார். தாம் பணியாற்றும் பாடசாலைக்கு உதவிய ஊரவரொருவர் மதுவருந்தும் பழக்கமுடையவர் என்பதால் அவரது உறவைத் துண்டிக்க நினைத்தார் செல்லத்துரை சுவாமி. ஆனால் அவரது குருநாதரோ **குடிகாரரும் நமக்கு வேண்டும்; அவர்கள் குடித்துவிட்டுச் செய்யும் காரியத்தைக் குடியாத நம்மால் செய்ய முடியாது** என்றார். அவருடன் நகரச் சந்தைக்குச் செல்கையில் பைத்தியக்காரப் பெண்ணொருத்தியைச் சுட்டிக்காட்டி **இப்பெண் எனது குரு** என்றார் யோகர் சுவாமி. சுவாமிகள் கையில் வைத்திருந்த குடையினைச் செங்குத்தாகப் பிடித்திருந்தமையைக் கண்ட அப்பெண் **இப்படிக் குடை இருந்தால் மற்றவருக்குக் குத்தாதோ?** எனத் தன்பாட்டில் கூறிச் சென்றாள் என்பதால், பெரியவர் சிறியவர் என்ற பேத புத்தியை அகற்ற வேண்டும் என்ற உண்மையை உணர்த்தி நின்றார் தவயோக சுவாமி. கொழும்புத்துறைக் கொட்டிலில் இருந்தபடி மீன் வியாபாரி ஒருவரின் கால்களைக் காட்டி **அதோபர், அது திருவடி** என்றார். செல்லத்துரைச் சீடரிடம் 1958 மே மாதத்தில் இலங்கையின் தென்னிலங்கைப் பகுதிகளில் தமிழருக்கு எதிராக நடைபெற்ற இனக்கலவர நினைவு மேம்பட்டபோது **உபாத்தியார்! பகைவர்களை அன்பினால் வெல்ல வேண்டுமென்றே சான்றோர்கள் சொல்லி இருக்கிறார்கள்** என்று கூறினார். பின் அவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளுவார் என்றார்.

செல்லத்துரை சுவாமிகளின் இளம் வயதில் அவரது தந்தை இறந்து விட்டார். சிவதொண்டனில் நிலைபெற்ற பின்னர் மாதம் ஒருமுறை தம் தாயாரைப் பார்க்கச் செல்வார். இப்படி ஒருமுறை செல்வதற்காக வீதியில் இறங்கியபோது

எதிர்ப்பட்ட யோகர் சுவாமி **எங்கு வெளிக்கிட்டது?** என வினவி அறிந்தபின் **தாவிச் செல்லும் மனதைத் தம்பி கேளடா! கூவிக் கூவியழைத்து கூடக் குடியிருத்தடா!** என்று பாடினார். அன்றுடன் தாயாரைப் பார்க்கும் எண்ணமும் பிரியமும் செல்லத்துரை சுவாமி மனதிலிருந்து அகன்றது. அவர் செங்கலடி சிவதொண்டனில் இருக்கும்போதே 1990 களின் நடுப்பகுதியில் (1995 அல்லது 1996 இல்) சுவாமிகளின் தாயார் காலமானார். நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளினால். சுவாமிகள் தாயாரின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்ள வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. யோகர் சுவாமிகளின் முன்னிலையில் இரு பிள்ளைகளுக்குப் பகவத் கீதை படிப்பித்துக் கொண்டிருந்த செல்லத்துரை சுவாமிகள், **ஆஸாத் பவதி சம் மோஹ** என்னும் வாசகத்தை விளக்கும் பொழுது **இது வேண்டும், அதுவேண்டும்** என்று ஆசைப் படுதல் கூடாது. ஏனெனில் ஆசையே மோகத்திற்கு வித்தாகும் எனக் கூறக் கேட்டுக்கொண்டிருந்த சுவாமிகள் **இதுவேண்டாம், அதுவேண்டாம் என்றிருத்தலும் கூடாது** என்றார். வேண்டுதல் வேண்டாமை அற்று வாழும் பக்குவம் இதன்மூலம் உணர்த்தப்பட்டது எனலாம்.

ஒருநாள் செல்லப்பா சுவாமிகள் சலங்கழித்துக் கொண்டிருக்கையில் யாரோ அடித்தபோது விழுந்து விட்டார். அதனைக் கண்ணுற்ற கொழும்புத்துறை விதானையார் திருஞானசம்பந்தர், சுவாமிகளுக்கு அடித்த வனை அடித்துவிட்டார். ஆனால் செல்லப்பா சுவாமிகளோ விதானையாரைச் சின்னத்தனமான வார்த்தைகளினால் **அவனை ஏனடா அடிக்கிறாய்?** என ஏசினாரென்பதை யோகர் சுவாமிகள் தமது சீடருக்குத் தெரியப்படுத்தினார். **முற்றாக உணர்ந்த ஞானிக்கு இவ்வுலகம் ஒரு திரைப்படம் போல் தோன்றும். எல்லாம் கடவுளே என்று அறிந்தாலும் இயற்கைத் தோற்றம் இருந்துகொண்டே இருக்கும்** எனவும் சுவாமிகள் கூறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட சுவாமிகளின் கருத்துகளை அரண் செய்வதுபோல் 10.10.1959 தினத்திற்குரிய தமது நாட்குறிப்பில் **நல்லதும் கெட்டதுமான இயற்கையின் எழிலை அனுபவித்து மகிழ்** *(Enjoy the beauty of Nature both the good and evil)* எனச்

செல்லத்துரை சுவாமிகள் எழுதியிருந்தார். **மனிதன் மரணத்திற்கு அப்பாற்பட்டவன்** என்று தமது குருநாதர் தமக்கு உபதேசித்ததை மனதிற் கொண்டு சிலநாட்களில் **நாம் என்றுமுள்ளோம்** என்னும் தலைப்பில் சுவாமிகளின் விருப்பப்படி சிவதொண்டன் ஏட்டுக்காகப் பலமுறை எழுதி எழுதி வெட்டித் திருத்தி ஒழுங்காக்கிக் கட்டுரை எழுதினார். சுவாமிகளும் **நெடுக எழுதிக் கொண்டிரு** என ஆசீர்வதித்தார். அத்துடன் **நாம் என்றுமுள்ளோம் என ஒரு துண்டில் எழுதி அதனைச் சட்டைப்பையில் போட்டுக்கொண்டு திரி** என்றும் கூறினார். யோகிகளின் உள்மன வெளிப்பாடுகளை யார்தான் அறியவல்லார்? பக்குவமுள்ள ஆன்மாக்களாலேயே அவற்றைப் புரிந்து செயற்பட முடியும்.

தமது சீடருக்கு யோகமுனிவர் கடவுட்கோட்பாடு பற்றிச் செய்த உபதேசத்தின்போது, **கடவுள் எங்குமுளர், வேதஉபநிடதங்களுடன், அறிவாளிகளும் இதனையே கூறுகின்றார்கள். எல்லாம் அவரே; அவரில்லாத இடமேது? உலகில் பெரிய நூதனம் கடவுள். சண்டை, சமாதானம், கூடுதல், பிரிதல், பேச்சு, மௌனம், ஆண், பெண், அன்பு, வன்பு, இன்பம், துன்பம் யாவும் அதுவே. வேத சாத்திரங்கள் இவ்வொன்றையே எண்ணிலாக்காலம் எண்ணிலா வகையாகக் கூறின** என்றவாறு மொழிந்தார். ஒருமுறை செல்லத்துரைச் சீடர் தமது குருநாதரின் நடந்து, நடந்து களைப்புற்ற திருவடிகளை மென்மையாகத் தடவும்போது **இது என்ன பூனை நக்குவது போல** என்று சுவாமிகள் நகைத்தாராம். அந்த அதிர்ச்சியில் சற்றுப் பலமாகத் திருவடிகளைப் பிடித்து விட்டபோது **என்ன? கால்களை முறித்துவிடப் போகிறாயோ?** என நொந்தாராம். செல்லத்துரை சுவாமிகளுக்குத் தடிமன் ஏற்பட்டபோது **சிவ சிவ செல்வக்கணபதி ஓம் ஓம்** எனத் தொடங்கி சிவமூல மந்திரம், பிரணவ மந்திரம் ஆகிய வற்றைப் பயின்று வரக் கூடியதுடன் முதல்மூர்த்தம், வேலாயுதப்பெருமான், செல்லப்பர், சிவனடியார், திருவருள், திருமால், அயன் முதலான தேவர்கள், ஐம்பூதங்கள், ஐம்பொறிகள், ஐம் புலன்கள், தசநாடி எனப்பலவற்றையும் கூறி, இறுதியில் சத்குருவாகிய தம்மையே ஆணை கூறி வியாக மந்திரத்தை உபதேசித்தருளினார்.

இனிமேல் யோகர் சுவாமிகளின் திருவடி நீழலிலிருந்து இளைப்பாற வேண்டியதே என்ற திடவுறுதியுடன் சாதனை செய்யத் தொடங்கினார் செல்லத்துரை சுவாமி. தியான மண்டபத்திலுள்ள திருவடியில் கதிர்காம, சிதம்பரக் காட்சிகளைத் தரிசனமாகப் பெற்றார். திருவடிப் படிக் கட்டிலிருந்து திருவடி தந்த காட்சியையும் கண்டு அனுபவித்தார். தமது *13.06.1959* நாட்குறிப்பிலும், *28.06.1959* நாட்குறிப்பிலும் இவற்றைக் குறித்து வைத்துள்ளார். தமது இறையியல் அனுபவங்களை மறைமுகமாகச் **சிவதொண்டனில்** எழுதிவந்தார். யோகாசிரியர் பொன்மொழி, திருவருள் அமுதம் ஆகிய தலைப்புகளிலும் எழுதினார். சிவசிந்தனைப் பாடல்களைப் பாடினார். **மேகமிருள மயிலாடும்; மனம் தூய்மையடையப் பாடல்வரும்** எனக் குருநாதர் மொழிந்தமை மனதில் நிறைந்திருந்தது. நற்சிந்தனைப் பாக்கள் அத்தனையும் செல்லத்துரை சுவாமிக்கு மனப்பாடமாயிருந்தன. சுவாமிகள் சிவதொண்டன் நிலையத்துக்கு வந்தநாள் முதலாக தலைமை ஆசிரியர் பணியுடன் நிலையத்துக்கான சிவப்பணிகளிலும் இடையறாது ஈடுபட்டு வந்தார். **சிவதொண்டன்** இதழ் விடயங்கள், உள்ளடக்கத்தில் ஆசிரியருடன் சேர்ந்து உழைத்தல் முதலியவற்றினை மேற்கொண்டார். சிவதொண்டன் சபையின் தனாதிகாரியாகத் தெரிவுசெய்யப் பட்டார். அளவோடு செலவுசெய்து கணக்கு வைப்பவராக விளங்கினார். *22.05.1959* இல் சிவதொண்டன் நிலையப் பொறுப்பாளர் பணிக்குரியவராகி, மறுநாள் நிலைய நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டார். எதை எழுதும்போதும் **சிவகுரு துணை** என்றே குறிப்பிட்டுவிட்டு எழுதத் தொடங்குவார்.

யோகர் சுவாமியைத் தரிசிக்கச் செல்கையில் **உனக்கு மாற்றம் என்பது உண்மையா?** என்று குருநாதர் கேட்டார். பின்னர் **அது வதந்தி** என்றார். **எனக்குத் தெரியாமல் யார் மாற்றுவது?** என்றும் கூறினார். எப்போதும் தனது சீடருக்குத் துணைநின்று காத்தருளினார். சிவதொண்டன் நிலையப் பொறுப்பாளராய்ச் செல்லத்துரை சுவாமியை அமர்த்திய சில வாரங்களுக்குள் தியான மண்டபத்திற்கு ஏறும்படியில் அமர்ந்து தாய்போல் செல்லத்துரை சுவாமியின் தலையைத்

தடவி, திருவடி காட்டி வைத்தார். தமக்கு ஒருமுறை நோய் வந்தபோது கொழும்புத்துறை இல்லத்திலுள்ள அடியவர்கள் வெண்கருப்பட்டி தேடியலைவதைக்கண்டு **செல்லத்துரையிடம் சென்றீர்களா? அவரிடம் இருக்கும்** என்று கூற, அதன்படி அவரிடம் சென்று வாங்கி வந்தார்கள்.

குருவே தெய்வம் எனக்கொண்ட செல்லத்துரை சுவாமிகள், சிவதொண்டன் நிலையப் புராண மண்டபத்தில் திருவேற்றும்நாள் வாய்ப்பாராயணம், யாகநாள் ஒழுங்கு, சிவராத்திரி ஒழுங்கு, ஆச்சிரம வாழ்வுநாள் ஒழுங்கு ஆகியவற்றைக் கருமமே கண்ணாயிருந்து கவனித்து நடைமுறைப்படுத்தி வந்தார். ஏற்கெனவே சிவராத்திரியன்று நற்சிந்தனை முதற்பதிப்பு வெளியானபோதும், அதில் பிழைகள் அதிகம் காணப்பட்டதால், சுவாமிகள் அதனை விரும்ப மாட்டார் எனக் கருதியபடியால் 1962 இல் நற்சிந்தனையின் செம்பதிப்பு சிவதொண்டன் வெளியீடாக வந்தது. தமது குருநாதர், சிவதொண்டனுக்கு வந்து அவருடைய அருள்மேனியின் சான்னியத்தைப் படியச் செய்யாதுவிடின் சுவாமிகளின் திருவடிக் கலப்பின்பின் தாம் நிலையத்தில் இருப்பதில்லை எனும் மனவுறுதி செல்லத் துரைச் சீடரின் உள்ளத்தில் ஒளித்திருந்தது. சுவாமிகளும் தமது திருவடிக் கலப்புக்கு ஓராண்டுக்கு முன் பங்குனித் தலைத்திங்கள் நாளில் (1963 இல்) சிவதொண்டனுக்கு வந்தார். திருவடி வீற்றிருக்கும் அறைக்குக் கீழுள்ள அறையில் அவரைத் தங்கச் செய்து உபசாரம் புரிந்தார் செல்லத்துரை சுவாமி. **நீ பெரிய கள்ளன் காணும்** என்றார் குருநாதர். “உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது” என்னும் விபுலாநந்த அடிகளின் பாடலடி இங்கு பொருந்தி நிற்கிறது. சிவயோக அனுபவத்தால் உந்தப்பட்ட சீடர், உறக்கம் நாடியபோது **என்ன கலியாண நித்திரையோ** எனக் கூறி விடியும்வரை விழித்திருக்கச் செய்தார் குரு யோகர் சுவாமி. **வேலையில் மாளப்படாது** என்று குருநாதர் சொல்லுமளவுக்குச் சிவதொண்டில் ஈடுபட்டுழைத்தவர் செல்லத்துரை சுவாமி. 1964 ஆம் ஆண்டு பங்குனி மாதம் ஆயிலிய நாளில் தமது 92 ஆவது அகவையில் திருவடிக் கலப்புற்ற யோகர் சுவாமியின் திருமேனி கோம்பயன்

மணலில் அக்கினிப் பிரவேசம் செய்து சங்கமமாகியது. இரவு முழுவதும் அங்கே தங்கியிருந்து அன்பர்களுடன் சேர்ந்து அஸ்தியைச் சேமித்துக் கொண்டார் செல்லத்துரை சுவாமிகள். சுவாமிகளின் நினைவுகளைச் சுமந்த கட்டுரைத் தொடர் **திருவருள் அமுதம்** என்ற தலைப்பில் சிவதொண்டனில் செல்லத்துரைச் சீடர் எழுதி வெளிவந்தது. 16.03.1996 இல் பூரண நற்சிந்தனைப் பதிப்பும் வெளியாகியது.

1965 ஆம் ஆண்டு அரச உத்தியோகத்திலிருந்து செல்லத்துரை சுவாமிகள் ஓய்வு பெற்றுக் கொண்டார். ஆனி உத்தரத்திற்குச் சிதம்பர யாத்திரை மேற்கொண்டார். தொடர்ந்து வடஇந்தியத் தலயாத்திரையை மேற்கொண்டு கங்கை நீரில் நீராடிக் கரைசேர்ந்தபோது தமது உடைகளை வைத்த இடத்தில் காவி உடை இருக்கக் கண்டார். கூடவே **உடுத்திக்கொள்** என்ற குரலும் கேட்டது.

## செங்கலடி சிவதொண்டன் நிலையம்



சிவதொண்டன் நிலையம் - செங்கலடி

சித்தாண்டி – செங்கலடி சிவதொண்டன் நிலையம் 1964 இல் தொடங்கப்பட்டது. சோல்பரிப் பிரபுவின் மகனான சாந்த சுவாமிகள் அங்கு பணியாற்றி வந்தார். அவர், ஏற்கெனவே யோகமுனியால் ஆட்கொள்ளப்பட்டவர். யோகர் சுவாமியின் உத்தம சீடராக ஒழுகித் திருத்தொண்டில் ஈடுபட்டவர். அவர் கைதடி ஆச்சிரமத் துறவி மார்க்கண்டு சுவாமிகளுடன் கூடி உபசாந்தராய் இருக்க விரும்பினார். **அவர் சிவதொண்டன் நிலையத்திலிருந்து வெளிக்கிட விரும்பினால் தடை செய்யாதீர்கள்; அவர்பாட்டில் விட்டு விடுங்கள்** என்று முன்பு யோகர் சுவாமி கூறியிருக்கிறார். மேலும் **நீங்கள்**

**சித்தாண்டிக்குச் செல்லுங்கள்; நான் அங்கு வருகிறேன்** என்றும் கூறியிருந்தார். அதற்கேற்ப தமது 23 வருட யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்துக்கான சிவத் தொண்டினின்றும் நீங்கி 1977 ஆம் ஆண்டு செங்கலடி சிவதொண்டன் நிலையத்தைச் சென்றடைந்தார் செல்லத் துரை சுவாமிகள். அங்கிருந்தபடியே அன்பர்கள் உதவியுடன் யாழ்ப்பாண நிலைய நிர்வாகத்தையும் கண்காணித்து நடத்தி வந்தார். தொண்டாளர் பற்றாக்குறை செங்கலடியில் நிலவியபோது இறையருளால் பலர் வந்து பணியாற்றலா யினர். இலங்கை நாட்டில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற அசாதாரண சூழ்நிலை நிலவிய காலமானதாகையால் எத்தனையோ இன்னல்களையெல்லாம் இறையருளால் தாண்டி நின்று அங்கு கால்நூற்றாண்டுகாலம் (1977 – 2002) தொண்டாற்றினார்.

யாழ்ப்பாணம் சிவதொண்டனில் மாத முதல் ஞாயிறும், செங்கலடி சிவதொண்டனில் மாதத்து மூன்றா வது ஞாயிறும் யாக நாளாக அனுட்டிக்கப்பட்டது. இது 1983 இன் பின் தடைப்பட்டதுடன் அன்னதான நாளாக மாறியது. ஆயிலிய நாள் அனுட்டானம் யாழ்ப்பாணத்தில் நல்லூரில் நண்பகலிலும், சிவதொண்டனில் மாலையிலும் அனுட்டிக் கப்பட்டது. 1988 ஆம் ஆண்டிலிருந்து செங்கலடி சிவ தொண்டனிலும் அனுட்டிக்கப்பட்டு வருகிறது.

செங்கலடி சிவதொண்டன் நிலையத்தில் தனியாளா கத் தங்கியிருக்கக் கூடிய நிலை உக்கிர யுத்த காலத்தில் சுவாமிகளுக்கு ஏற்பட்டது. விலங்கத்துக்குள்ளும் விளங்கும் இன்னருள் அவருக்குத் துணையாய் நின்று ஆன்ம பலத்தினை அளித்தது. தமது நாட்குறிப்பேட்டில் 26.07.1990 அன்று மட்டக்களப்புப் பிரதேசத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கை பற்றிச் சுவாமிகள் குறிப்பெழுதி வைத்துள்ளார்.

"எதிரே துவக்கை நீட்டிய வண்ணம் வரும் வீரனைக் கண்டபின்தான் இவர்கள் இலங்கை இராணுவத்தினர் என்று அறியக்கூடியதாயிருந்தது. நான் சென்ற அதே கதியில் நேரே சென்று கொண்டிருந்தேன். வீதியிலிருந்து ஒரு கட்டளைச் சத்தத்துடன் அப்போர் வீரர் குழுவின் தலைவன் என எண்ணக்கூடிய ஒருவர் என்முன் வந்தார். அவர் என்னை

விசாரித்தார். இது ஓர்தேவாலயம் என்றும் நான் இத் தேவாலயத்தில் இருப்பவர் என்றும் கூறினேன். அவர் சொன்னவற்றுக்கு மதிப்பளித்தார் எனத் தெரிந்தது. அவர் திரும்பிச் செல்லும்பொழுது "இது தேவாலய பசு வரும் நேரம். அது வருவதற்கு வழிவிட்டு நின்றால் நல்லது" என்று கூறினேன். கூறிவிட்டுக் கோயில் முற்றத்துக்கு வரும்போது பசு வெருண்டு கத்தும் சத்தம் கேட்டது. தொடர்ந்து பசு ஆச்சிரமத்தினுள் வருவதும் தெரிந்தது." *(சிவதொண்டன் யூலை 2006 பக் – 02).*

ஒவ்வொரு செயலிலும் திருவருள் முன்னிற்பதை இச்செயல்மூலம் தெளிவுபடுத்தினார் சுவாமிகள். போர்க் காலத்தில் ஏகாந்தமான சூழ்நிலையில் நடைபெற்ற ஒவ் வொரு செயல் பற்றியும் சுவாமிகள் இறையருளின் மகிமையை நினைந்து கொண்டார். **எல்லாம் ஓரிடத்து வேலை, கடவுளுடைய திருவுளப்படிதான் நடக்கும், கடவுளும் நானுந்தானே மிச்சம், தனியே சுகமாக இருக்கிறேன், சாதல் வரினும் தொழும்பிற் பிழையேன், வழிகாட்டி வழித்துணை, ஒரு தேவையுமில்லை, தேவையானால் வேண்டியது வேண்டியபோது கிடைக்கும், ஒழுக்கமாயிருந்தால் எந்த சமுதாயத்துடனும் இணங்கி வாழலாம், ஒரு குறையுமில்லை என்னும் இடத்திலிருந்து கொண்டே சிவதொண்டு செய்ய வேண்டும்** என்பன போன்ற சிந்தனைகளும், செயற்பாடுகளும் ஆபத்தான வேளைகளிலும் எந்தவிதமான கஷ்டங்களு மின்றிச் சுவாமிகளை வழிநடத்திச் சென்றன. உயிராபத்து நிறைந்த சூழலில் செங்கலடி சிவதொண்டன் நிலையத்தில் தனித்திருக்காமல் கல்லடி ஸ்ரீ ராமகிருஷ்ணா மடத்துக்குச் சென்று தங்கியிருக்குமாறு அன்பர்களும், சிவதொண்டன் சபையினரும் கேட்டுக்கொண்ட போதிலும் சுவாமி உடன்படவில்லை. **இந்த நிலையில் இவ்விடத்திலிருந்து கால் தூக்கினால் பின் இங்கு வருவதில் அர்த்தமில்லை** என்று கூறிவிட்டார். "இது சுவாமி தந்த பொறுப்பு அலட்சியம் செய்ய முடியாது; நமது பொறுப்பை அவரிடம் ஒப்படைத்துவிட்டு, எதுவந்தாலும் சரியென்று இருக்கவேண்டியதுதான்" என மேலும் கூறியுள்ளார். அவரது குரு பக்தியும், இறை பக்தியும் அவருக்கு அக்கொடிய வேளையிலும் எவ்வித

துன்பங்களையும் ஏற்படுத்தவில்லை. சாத்திரியார், மயில் வாகனம் போன்ற அன்பர்கள் இராணுவ அனுமதியுடன் வந்து அவரைப் பார்த்துச் சென்றனர்.

இந்தப் பகுதியில் ஒரு மனிதரும் இல்லை; நீங்கள் மட்டும் ஏன் இருக்கிறீர்கள்? என்று இராணுவ மேஜர் கேட்டதற்குச் சுவாமிகளின்பதில் அந்த மேஜரையும் கனியச் செய்தது. "நான் ஒரு துறவி; எனக்கு இனம் சனம் கிடையாது; நான் பத்துப் பதினைந்து வருடமாக இவ்வாச்சிரமத்தில்தான் இருக்கிறேன். என்னை வேண்டியவருமில்லை. எனக்கு வேண்டியவருமில்லை; நான் எங்கு செல்வது? அதனால் ஆச்சிரமத்தில் இருக்கிறேன்" என்பது சுவாமிகளின் பதிலாக விருந்தது. மேலும் மேஜர் "தனியாக இருப்பதற்குப் பயமில்லையா?" எனக் கேட்டதற்கு "நான் ஒழுங்கு முறையாக இருக்கிறேன்; அதனால் நான் ஏன் பயப்பட வேண்டும்" என்றார் சுவாமி. ஆங்கிலப் புலமைமிக்க சுவாமிகளின் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்ட இராணுவ அதிகாரி **புலிகளுடன் உங்களுக்குத் தொடர் பில்லையா?** என்ற வினாவையும் தொடுத்தார். "நான் ஆச்சிரமத்தை விட்டு வெளிச்செல்வதில்லை; ஆதலால் வெளியுறவு ஒன்றும் எனக்கில்லை. இவ்வாச்சிரமத்திற்கு ஆன்ம நாட்டத்தினரே வருகின்றனர். இவர்களுடன் மட்டுமே எனது தொடர்புள்ளது" இவ்வாறு சுவாமிகள் பதிலளித்த பின்னர் மேஜரே சுவாமிகளை அழைத்துவந்து நிலைய வாசலில் விட்டதும், மரக்கறி உணவுப் பொதிகள் கொடுத்ததும், தேவையான மரக்கறி வகைகளை அனுப்பி வைத்ததும் நடைபெற்றது.

நாயன்மார் குருபூசை, புராணப்படிப்பு, திருவாசகம் முற்றோதல், குருகுலங்களை அமைத்தல், அருணாசல தேசிகரின் **சைவசமய சிந்தாமணி** நூலை வெளியிட ஆலோசனை கூறல், சமய நூல் வெளியீடுகளில் கலந்து கொள்ளல், சைவத் திருமுறைப் போட்டிகளை மாணவரி டையே நடத்தல், போட்டிக்கெனத் திருமுறைத் தொகுப்பு நூல் வெளியிடல், வெற்றி பெற்றோருக்கும் கலந்து கொண்டோருக்கும் பரிசில் கொடுத்து ஊக்கப்படுத்தல் ஆகிய பணிகளோடு சிறப்பான முறையில் சிவதொண்டனில்

ஆயிலிய நாள் அனுட்டித்தல், ஆச்சிரம வாழ்வுநாள் வகுப்புக் களை நடத்துதல் முதலானவற்றையும் செல்லத்துரை சுவாமிகள் தமது கடமைகளாகக் கருதிநின்றார். குரு குலங்கள் அமைப்பதற்கான ஆலோசனைகளை வழங்கி ஊக்கப்படுத்தினார். தமது மடத்தில் திருஞானசம்பந்தர் குருகுலம், தம்பிலுவிலில் தம்பையா ஆசிரியர் நிறுவிய திருநாவுக்கரசு நாயனார் குருகுலம், மட்டுநகர் இந்து சமய விருத்திச் சங்க மகளிர் இல்லமான மங்கைற்கரசியார் குருகுலம், வாழைச்சேனையில் சுந்தரமூர்த்தி நாயனார் குருகுலம், சந்திவெளியில் மணிவாசகர் குருகுலம் ஆகியன அமைவதற்கு ஒத்தாசை புரிந்து நின்றார். அவ்வில்லங்களுக் கெல்லாம் சென்று வந்தார். 1999 இல் சித்தாண்டியில் அமையப் பெற்ற யோகர் சுவாமிகள் சைவ மகளிர் இல்லத்தில் யோகர் சுவாமி, செல்லத்துரை சுவாமி ஆகியோரது நிழற் படங்கள் வைக்கப்பட்டுத் தற்போது பூசைகள் நடைபெறுவதும் குறிப்பிடத் தக்கதாகும்.

செல்லத்துரை சுவாமிகள் சிவதொண்டன் சபைத் தலைவராகப் பொறுப்பேற்று இருந்தவர். செங்கலடியி லிருந்தவாறே யாழ்ப்பாண நிருவாகத்தையும் கவனித்தவர். ஆண்டுக் கூட்டம், குருபூசை நாள், நல்லூர்த் தேர்த்திருவிழா ஆகியவற்றிற்கு யாழ்ப்பாணம் வந்து ஓரிரு நாட்கள் தங்கியிருப்பார். நாட்டு நிலைமை காரணமாகக் தரை, கடல் மார்க்கப் பயணங்களை மேற்கொண்டார்.

யோகர் சுவாமிகள் 1953 நவம்பரில் நிறுவிய சிவதொண்டன் நிலையத்தைப் பராமரிக்கும் பணியில் ஓராண்டு காலத்துக்குள்ளேயே பக்குவமுள்ள ஆத்மாவாகிய செல்லத்துரை சுவாமிகளை அழைத்து வந்து அங்கேயே இருத்தினார். தெளிந்த மனத்தினரான அவரும் பரமாச்சாரியப் பணிகளைப் பக்குவமாக ஆற்றி வந்தார். தியான மண்டபத்தை மூலதனமாகக் கொண்ட கோயில், சிவத் தியானத்திற்குப் பக்குவப்படுத்தும் அறநூல்களை ஓதும் புராண மண்டபம், எளிமையான நித்திய பூசை, உயிர்ப்புடைய யாகநாள், படாடோபமில்லாத வரையறுக் கப்பட்ட விழாக்கள் ஆகியன செல்லத்துரை சுவாமிகளால் ஒழுங்கமைக்கப்பட்டன. ஆரம்ப நாட்களில் மண்டபத்

தூய்மை, புராணப் படிப்பு என இடைவிடாது ஈடுபட்டார். அவ்வப்போது குருவின் வாயினின்றும் வெளிவரும் அருள் மொழிகளை நெஞ்சில் எழுதி வைத்தார். பல்வேறு ஆன்மீக நூல்களையும் எழுத்தெண்ணிப் படித்தார். திருவடிப் பூசையை உயிர்ப்புடன் நிறைவேற்றி வைத்தார். நான்கைந்து மணித்தியாலங்கள் தியானத்தை மேற்கொண்டார். திருவடியின் முன்னர் தம்மை ஒப்படைத்து மனோலயம் வாய்ப்பதை உணர்ந்து கொண்டார். சிவதொண்டன் நிலைய வளங்களைப் பேணிப் பாதுகாத்தார். தியான மண்டபத்தில் வீற்றிருக்கும் யோகர் சுவாமிகளின் திருவடியைத் தலைத் தளம், தலையிடம் என வழங்கினார். நித்திய பூசையை நெடுங்காலமாகத் தானே செய்து வந்தார். திருவடியின் முன்னின்று சுவாமியைக் காண்பதாகவே கருதி, அவருக்குச் செய்வதாகவே பூசனை இயற்றினார். தலையாய பூசனைத் திரவியங்களைப் பயன்படுத்தினார். அதற்காக இந்தியா விலிருந்து வாங்கி வந்த வலம்புரிச்சங்கு, கஸ்தூரி, மட்டக் களப்பிலிருந்து கொணர்ந்த பசுநெய் ஆகியவற்றை அறையிலிருந்த அலுமாரி ஒன்றில் சேமித்து வைத்தார். பலாப்பழம் அரிதான காலங்களிலும் அதனைக் கஷ்டப் பட்டுப் பெற்றுப் பஞ்சாமிர்தத்திற் கலப்பார். புராண படிப்பொழுங்கில் யோகர் சுவாமி செய்ததைப் போலவே விநாயகரகவல், திருவெழு கூற்றிருக்கை, சிவபுராணம், தையல்நாயகித் தாயே என்னும் பிரார்த்தனைப் பாடல் ஆகியவற்றுடன் முடிவில் புராண படனமும் இடம்பெறச் செய்தார். யோகமுனிவரின் வாக்கானது **கடவுள் ஒவ்வொருவருடனும் கூட இருக்கிறார் என்பதை ஆறுதலாக இருந்து பாருங்கள் என்று யாகநாளில் வருபவருக்குச் சொல்** என்பதாக இருந்ததை நினைத்து யாகநாள் நிகழ்வுகளை ஒழுங்கு செய்தார். யோகர் சுவாமிகள் திருவடிக் கலப்புற்ற பின் திங்கள் தோறும் வரும் ஆயிலிய நாளை அனுட்டிக்கும் நியமத்தைத் தொடக்கி நடைமுறைப் படுத்தினார். நற்சிந் தனைப் பாக்களிலுள்ள குருதோத்திரப் பாக்களை இதற்குப் பொருத்தமெனக் கண்டு **குரு தோத்திரமாலை** என்ற பெயரில் தொகுத்தளித்தார். இதுவே ஆயிலிய நாளில் பாராயணம் செய்யப்படுவதாகும். சிவராத்திரியை நடுநாயகமாகக் கொண்டு திருவடி பூசை, கால்கோள், ஆருத்திரா அபிடேகம்

ஆகிய நான்கு விழாக்களை நடத்தலானார். இவற்றுடன் யோகர் சுவாமியின் குருபூசையும் இணைக்கப்பட்டது. செல்லத்துரை சுவாமிகள் சிவதொண்டன் ஒழுங்குகளைப் பேணுவதில் சர்வாதிகாரிபோல் செயற்பட்டார் எனக் கூறப் படுகிறது. **கடவுள் வந்தாலும் ஒரு கதிரையில் இருத்திவிட்டுக் கடமையைப்பார்** என்று குரு உணர்த்திய வழியில் நடந்தார் எனலாம். கட்டுப்பாடு பேணியும் பாரபட்சம் இன்றியும் நடந்துகொண்டார். சிவதொண்டனை ஒரு தபோவனமாகக் கருதினார். யாழ்ப்பாணத்திலும் பார்க்கச் செங்கலடி இயற்கையாகவே அதற்குப் பொருத்தமாயிருந்தது.

குருமுதல்வரின் திருவாய்மொழிகளைச் செம்மை செய்து நூலாக்கினார். நற்சிந்தனை செம்பதிப்பு வெளிவரப் பாடுபட்டார். **எங்கள் ஆசான் அருள்மொழிகள்** நூலினை வெளியிட்டார். **யோகர் சுவாமிகளின் வாழ்க்கையும் வழி காட்டலும்** நூலினையும் வெளிவரச் செய்தார். **சிவதொண்டன்** வரவில் அக்கறை செலுத்தியதுடன் ஆத்ம சாதகர்க்கான அறிவுரைகளை நூற்றுக்கணக்கான கட்டுரைகளாக எழுதி வெளியிட்டார். தாமே அருள்வேட்டல் பாக்களைப் பாடித் தந்ததுடன் அவற்றை **சிவசிந்தனை** என்னும் பெயரிலும் அளித்தார். சிவதொண்டன் சபை வெளியீடுகள் அனைத்தை யும் அவரே பரிசோதித்து ஒழுங்கமைத்தார். **நற்சிந்தனை** (தமிழ்), **நற்சிந்தனை** (ஆங்கிலம்), **நற்சிந்தனைக் கீர்த்தனை கள், பெரிய புராண வசனம், யோகர் சுவாமியின் வாழ்க்கை யும் வழிகாட்டுதலும், என் நெஞ்சில் இடம்கொண்ட ஒரு பெரியார் யோகர் சுவாமிகள், நமச்சிவாய மாலை, தியானகாலச் சிந்தனை, யோகர் சுவாமிகள் அருள்மொழிகள், சிவத்தியான மாலை (உரையுடன்), தாயுமானவ சுவாமிகள் திருப்பாடல் மூலமும் பொழிப்புரையும், தாயுமான சுவாமிபாடல், சைவத் திருமுறைத் திரட்டு,** ***Homage to Yoga Swamy*****, சண்முக கவசம், முருகன் திருப்பாடல் திரட்டு, ஈழத்துத் திருப்புகழ், சர்வ ஞானோத்திர ஆகம ஞானபாத வசனம், திருவாசகம்** ஆகியவை இவற்றுள் அடங்குவன. பல்வேறு திருத்தொண்டு களினடிப்படையில் சுவாமிகள் தமது குருவின் நியமங்களைப் பின்பற்றிச் சிவதொண்டன் மரபினை உருவாக்கித் தந்துள்ளார்.

செங்கலடி சிவதொண்டன் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் 2002 ஆம் ஆண்டு செல்லத்துரை சுவாமிகள் திரும்பினார். அப்போது அவருக்கு 88 வயதாக இருந்தது. ஆனால் உடலும், உள்ளமும் தளராத நிலையில் காணப்பட்டார். மீண்டும் தொடங்கும் மிடுக்குடன் நிலையப் பணிகள் வேகம் பெற்றன. அடியார்களும் பெருகினர். **யோகர் சுவாமிகளின் வாழ்க்கையும் வழிகாட்டுதலும்** நூலினைப் புதுக்கி விரித்து இரண்டாம் பதிப்பை 01.04.2004 இல் வெளியிட்டார். செங்கலடியிலிருக்கும் போதே **பெரியபுராணப் படனம், திருவாசகம்** முதலிரு பதிப்புகள் ஆகியவற்றை வெளியிட்டு நிறைவு கண்டிருந்தார். **பெரியபுராண வசனம்** சிதம்பர சிற்சபைக் காட்சியைச் சித்திரிக்கும் அட்டைப் படத்துடன் 2006 இல் நல்லூர்த் திருவிழாவன்று வெளிவந்தது. அதில் நாயன்மார் குருபூசைகளில் பாடுதற்கேற்ப திருக்குறட் பாடல்களையும் இணைத்திருந்தார். திருவடிக் கலப்புறுவதற்கு (சமாதியடைவதற்கு) ஐந்துநாள் முன்னதாக **திருவாசகம்** 51 பகுதிகளின் பிழிவாக மூன்றாம் பதிப்பு வெளிவந்தது. சைவத் தமிழ் நூல்களை வெளியிடுவதனூடாக அவை சாதாரண மக்களையும் சென்றடைய வேண்டுமெனக் கருதினார். இரு மணித்தியாலங்கள் அளவில் ஆன்மீகக் கருத்துரை வழங்கும்போது திருமந்திரம், தாயுமான சுவாமிகள் பாடல்கள் பற்றிக் கூறுவார். அப்போது **அடிசேர்தல்** என்பதற்கு விளக்கமளிக்கையில் "மென்மேலும் பெருகும் முடிவுறா இன்பப் பெருக்கு" எனக் கூறுவது தித்திப்பைத் தரும். அவரது தினக் குறிப்புக்களிலிருந்து பல்வேறு ஆன்மீக விடயங்கள் பற்றியறிய முடியும். நிலையத்துக்கு வந்த ஆரம்ப நாட்களில் சிவதொண்டன் நிலையமானது தியானம் செய்து கடைத்தேறும் இடமாக, தியான அனுபவம் கைகூடும் இடமாக அவருக்குத் தென்பட்டது. 27.09.1954 தினக்குறிப்பில் தமது தியான அனுபவங்கள் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"சிவ - காலை தியானம். என்வாழ்க்கையில் கற்பித்துக் காணமுடியாத பேரின்பப் பெருஞ்சோதியைக் கண்டேன். நேற்றுச் சுவாமி, குருநாதன் சிரித்த சிரிப்பை நினைக்க - மனம் நிற்க. மகாசோதியின் ஆனந்தத்தால்

*அற்புதமான தெய்வீகச் சிரிப்புச் சிரித்துச் சிவ சிவ என்ற ஒலி. என் உள் ஒளியினுள் திளைத்தேன். சிறிது முன் தேகத்தி லுள்ள நரம்புகளுக்கூடாக (எல்லாம்) ஓர் மின்சக்தி போன்ற மகாசக்தி விறுவிறென மேல்நோக்கி ஏறிய உணர்ச்சி. சோதியின் வியர்வை, கண்ணீர் ஆகியன உண்டு. அந்நிலை யிலிருந்து இறங்க முடியவில்லை. யோககுருநாதன் எழுந்து இன்னும் எத்தனையோ பெயருடன் கைகோர்த்து என்னைத் தூக்கிவிட்டுக் காவல் காத்துக்கொண்டிருந்த காட்சியின்பின் இது நடந்தது. பகல் முழுவதும் அந்தர் முகமாக இருந்தது. நா சிவ சிவ எனப் பிதற்றும்போது பல சுமை குறைந்த மாதிரி இருந்தது. மாலை ஆறு மணியளவில் குருநாதன் திவ்விய காட்சி போனதும் எதிர்பார்த்தமாதிரி "வா வா எப்படி! சிவபுராணம்" (சிவதொண்டன் ஏப்ரல் 2006 – பக்கம் 12 – 13).*

ஒருபானை சோற்றுக்கு ஒருசோறு பதம் போன்றது. இந்தத் தியானக் காட்சி. இப்படி எத்தனையோ இறையனு பவங்கள் - குருநாதரூடாக செல்லத்துரை சுவாமிக்கு ஏற்பட்டன. அவற்றைச் சொற்களால் வர்ணிக்க முடியாது. ஏனெனில் "சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து வீடு" என்பதால், அது கைகூடும் அனுபவங்களும் அத்தகை யெனவே. குருநமசிவாயரின் **நமசிவாய மாலை**, ஞான நெறி பற்றிய **சர்வ ஞானோத்திர ஆகம ஞானபாதம் -வசனம்** *(1997)* ஆகிய நூல்களைச் சிவதொண்டன் வெளியீடுகளாகச் சுவாமிகள் கொண்டு வந்ததன் நோக்கத்தை நாம் புரிந்து கொள்ள முடியும்.

## இக வாழ்வின் எல்லையில்

இக வாழ்வின் இறுதிக் காலத்தில் சுவாமிகளுக்குச் சர்க்கரை நோய் காணப்பட்டது. இருந்தாற்போல் 2006 மாசி மாதத்தில் காற் பெருவிரலில் புண்ணொன்றும் ஏற்பட்டது. அதன் தாக்கத்தினால் புறங்கால் வீக்கமுற்றுக் கருமையும் படர்ந்தது. சுவாமிநாத பண்டிதரின் அடங்கன்முறை நூலையே கைந்நூலாகக் கொண்டு எப்போதும் பாடிவரும் சுவாமிகள், இப்போது அன்பர்களிடம் அப்பர் பெருமானின் இறுதிப் பதிகமான **எண்ணுகேன் என் சொல்லி** தேவாரத்தைப் பாடச் சொன்னார். அவ்வேளை வைத்தியரும் வந்து

சேர்ந்தார். அவரே குறித்த பதிகத்தைப் பாடினார். இரண்டாம் பாடலான **அங்கமே பூண்டாய்** பாடும்போது **சமுத்திரத்தில் நஞ்சுண்டு சாவா மூவாச் சிங்கமே** எனும் வரிகளைக் கேட்கையில் சுவாமிகளின் இதழ்கள் துடித்து, வாய் சிறிது அகன்று, கன்னம் புடைத்துக் கண்ணீர் சொரிந்தது. புண்ணுக்கு வைத்தியம் செய்வது பற்றிக் கூற, **இதுதான் ஆறுதல்** என்றார். அன்பர்கள் தொடர்ந்து வற்புறுத்த **மேலே கேட்டு வாருங்கள்** (திருவடியை) எனக் கூறினார். அன்பர்கள் விடாப்பிடியாக அதியுயர் மருத்துவ ஆலோசனைகளும், பரிசோதனைகளும் நடத்துவித்தனர். கொழும்பில் மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டது. ஒரு கட்டத்தில் **சுவாமி (யோகர் சுவாமி) சிவதொண்டனிலிருந்து நிலையத்தைக் கவனித்துக் கொள்ளுமாறு கூறினவர். நான் இங்கு தங்கி உடம்பைக் கவனித்துக் கொண்டிருக்க முடியாது** என்று கூறி தான் தங்கிச் சிகிச்சை பெற்று வரும் கொழும்பு இரத்தினம் வைத்திய சாலையிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு ஆயத்த மானார். அவருக்குப் பிரயாணம் செய்வதற்கேற்ற உடல் நிலை இல்லையென வைத்தியர்கள் கூறியபோது **எனது உடம்பை எனக்குத் தெரியும்** எனக் கூற, அவர்களும் சில ஒழுங்குகளுடன் (ஒரு வைத்தியர், ஒரு தாதி, தக்க கருவிகள் உட்பட) தங்கள் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு வந்து சிவதொண்டனில் விட்டனர்.

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தை அடைந்ததும் சுவாமி வழமைபோன்று தமது கருமங்களைச் செய்தார். 12.03.2006 ஆயிலிய நாளில் நடைபெறவுள்ள குருநாதரின் குருபூசைக்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினார். அயலிலுள்ள காணியை வாங்கும் முயற்சியில் ஈடுபட்டார். நிலையத்தின் வடக்குப் பக்க மாகவுள்ள காணியினை வாங்கி உணவு விடுதியொன்று கட்டத் தனியாரொருவர் தீர்மானித்த வேளையில், அதன் ஒரு பகுதியை அன்பர்களின் உதவியினால் (மூன்றரைப் பரப்பு) வாங்கி நிலையத்துடன் இணைத்துக் கொண்டார். தாம் வழமையாக வீற்றிருக்கும் தூணுக்கருகில் உள்ள ஆசனத்தில் சாய்ந்தவாறு (தென்கிழக்கு மூலை) எல்லா நடவடிக்கைகளையும் கவனித்து வந்தார். மீண்டும் புண்ணில்

நீர்க்கசிவு ஏற்பட்டது. அன்பர்களின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டுக் கொழும்பில் முன்னர் மருத்துவம் பார்த்த வைத்தியசாலைக்குச் செல்லவேண்டி ஏற்பட்டது.

அங்கு பரிசோதனை செய்து பார்த்ததில் சுவாமிகளின் இருதயம், சிறுநீரகம் ஆகியவற்றின் செயற்பாடுகள் குறைந்து வருவதாகத் தெரிந்தது. யோகர் சுவாமிகள் மீது பக்தி கொண்ட இருதய சத்திரசிகிச்சை நிபுணர் வாலுப் பிள்ளை என்பவர் பரிசோதித்துப் பார்த்தார். அவரைச் சுவாமிகளுக்கு முன்னரே நன்கு தெரிந்திருந்தது. இருந்தும் சுவாமிகளின் உடல்நிலை திருப்தியாக இருக்கவில்லை. உடலின் செயற்பாடுகள் குறைந்து கொண்டே வந்தன. சுவாமி தமது அடியவரொருவரிடம் தமக்கு ஆசாரியாரைக் கொண்டு கிரியையேதும் செய்ய வேண்டியதில்லையென்றும், விரைவாக உடலை எரித்துவிட வேண்டுமென்றும் கூறியிருந்தார். கோமா நிலையிலுள்ளார் எனக் கருதப்பட்ட போதும் தமது அருகில் நின்ற சிவச்செல்வனிடம் வெந்நீரால் தமது உடம்பை நன்றாகக் கழுவி விடுமாறு கேட்டுக் கொண்டார். மயக்க நிலையிலும் அவரது கூற்றுப் பலரையும் வியப்பிலாழ்த்தியது. பின்னர் தமக்கு நல்ல வேட்டி உடுத்து விடுமாறு கூறினார். இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் ஆத்மகணானந்தா அவர்கள் அவரைப் பார்க்க வந்தார். சுவாமியிடம் ஒரு வித்தியாசத்தையும் காணவில்லை எனக் கூறிச் சிரித்தார். சுவாமியும் **சுகமாகத்தானே இருக்கிறோம்** எனக் கூறினார். ஆன்ம பலம் என்பது இதனைத்தானோ? துயில்கொண்ட செல்லத்துரைச் சுவாமிகள் நீண்ட நேரமாக எழுந்திருக்கவில்லையாதலால் வைத்தியர்கள் அவசர சிகிச்சையளித்தனர். அப்பலோ மருத்துவமனைக்குச் சுவாமிகளை இடமாற்றினர். மறுநாள் போய்ப் பார்க்கையில் சுவாமி சுகமாயிருந்தார். தனக்கு முதல்நாள் நடந்த யாவற்றையும் அறிந்திருந்தார். அன்றுமுதல் பிடிவாதமாக மருந்து உட்கொள்ள மறுத்ததுடன், யாழ்ப்பாணம் சிவதொண்டனுக்குத் தம்மைக் கொண்டு செல்லுமாறு வற்புறுத்தினார்.

## மீண்டும் சிவதொண்டனில்

சிவதொண்டன் நிலையத்தைச் சேர்ந்த சுவாமிகள் வேர்த்தால் குளித்தார்; தூணடியில் உட்கார்ந்து அன்பர் களுடன் உரையாடினார். திருமுறைப் பாடல்களுடன் கந்தரனுபூதி, கந்தர்கலிவெண்பா, அருணாசல அட்ச ரமண மாலை, நற்சிந்தனை, சிவசிந்தனை எனப் பலவற்றையும் அடியவர்களுடன் சேர்ந்து பாடினார். இக்காலப் பகுதியில் தான் அயற்காணியின் உறுதி எழுதப்பட்டது. அக்காணியி லுள்ள வீட்டின் பகுதிகளைப் பார்வையிட்டார்; செய்ய வேண்டிய திருத்தங்களைக் கூறினார். நானூறு ஐந்நூறு பேர்களுக்கு இரண்டு, மூன்று நிரைகளில் வைத்து அன்னமிடலாம் என்றார். குருபூசை தினத்தன்று குடிபுக வேண்டுமென்றார். குடிபுகும்பொழுது மட்டக்களப்பிலுள்ள சிவதொண்டன் நிலையப் பசு கொண்டுவந்து கட்டப்பட வேண்டும் என்றார். அவை யாவும் எளிதில் நிறைவேறின. குருபூசை நாளன்று புராண மண்டப வாயிலிலிருந்து வருவோரை அன்பொழுகப் பார்த்து மகிழ்ந்தார். குருநாதரின் அபிடேகத்தினைப் பார்த்துக் கண்ணீர் சொரிந்தார். அன்று மாலை மட்டக்களப்பிலிருந்து வந்த அன்பர்களுடன் மகிழ்ச்சியாகவும் நகைச்சுவையாகவும் பேசிப் பொழுது போக்கினார். அடுத்த திங்கள் காலைப் பொழுதில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயம் செல்ல விரும்பினார். அங்கு வாகனத்தில் சென்று மூலத்தானத்துக்கு நேரேயிருந்து அம்மனைத் தரிசித்தார். தனது குருநாதர் யோகர் சுவாமியும், அவரது குருநாதர் செல்லப்பா சுவாமியும் நிறைவேற்றிய நியமத்தைத் தானும் கடைப்பிடித்துப் பொங்கிப் பொங்கலும் உண்டார்.

அடுத்த நாள் பங்குனி உத்தரநாள். சிவதொண்டன் நிலையத்தின் அயற் காணியிலுள்ள வீட்டுக்கு எழுந்தரு ளினார். அதற்குத் **தேவாரப் பாடசாலை** எனப் பெயர் சூட்டினார். மண்டபத்தில் பெரிய புராண வகுப்பைத் தொடங்கி நாள்தோறும் நடத்தி வருமாறு கூறினார். பங்குனி மாதத்துக் கடைசிப் புதன் கிழமை சுவாமிகளின் உடலம் செயற்பாடின்றி ஓய்ந்து கிடந்தது. அன்று நண்பகல் வரை வழமை போன்று இருந்தாலும், தம்மைக் காணவந்த

அனலைதீவு பரமலிங்கம், பாலசிங்கம் சகோதரர்களுடன் உரையாடிய பின்னர் தூணடியில் அமர்ந்திருந்தவர் "முட்டாக இருக்கிறது" எனக் கூறி அறையினுட் செல்ல விரும்பினார். செல்லும்போது புராண மண்டபத்தில் தங்கப் பொம்மை போல் வீற்றிருக்கும் குருநாதரின் திருவுருவத்தை நோக்கிய வாறு சென்றார். திருவடியையும் அவ்வாறே நோக்கினார்.

அறையினுள் வந்திருந்த சுவாமிகளின் முட்டுச் சிரமம் குறைந்தது. அன்பர்கள் கைகளில் சரிந்தார். மருத்துவர் மார்பை அமுக்கிப் பார்த்தபின் கூறிய சொல்லை அன்பர்கள் நம்பவில்லை. துறவிகள் எட்டு மணித்தியாலங் களுக்குப் பின்னரும் எழுந்திருப்பர் என நம்பினர். அதேபோல் சில மணித்தியாலங்களில் சித்த மருத்துவரொருவர் சுவாமி களின் நாடிகள் இயங்குவதாகக் கூறவும் மருந்துக் குளிசை கரைத்து ஊட்டப்பட்டது. மாலை ஆறு மணியளவில் சுவாமிகளின் உடலம் முழுமையாக இயங்கவில்லை. தமது குருநாதரைப்போலவே 92 ஆண்டுகள் இவ்வுலகில் பூவுடலை நிறுத்திவைத்தவர், இப்போது அதன் இயக்கத்தை நிறுத்திக் கொண்டார். மறுநாள் புராண மண்டபத்தில் பகல் 12 மணியளவில் திருவடிக்குச் செய்வது போன்று அபிடேகம், அலங்காரம், தோத்திரம், கீர்த்தனம் யாவும் நடைபெற்று அருணாசல அட்ச ரமண மாலை இசைப்ப, வீதியுலாவாகச் சுமார் 800 அன்பர்களுடன் எளிமையான முறையில் சுவாமிகளின் பூதவுடலானது கோம்பயன்மணல் மயானத் திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அக்கினிப் பிரவேசம் நடந்தது. அவரது திருவடிக் கலப்பானது 12.04.2006 இல் நடந்தது. உடலின் அக்கினி சங்கமம் 13.04.2006 இல் நடந்தேறியது. **ஓம் சிவ** என எப்பொழுதும் எழுதத் தொடங்கும் சுவாமிகள், **நாம் என்றுமுள்ளோம்** என்ற குரு வாக்கின்படி நம்மிடையே என்றும் வாழ்ந்து கொண்டிருக் கிறார்.

## யோகர் சுவாமியின் விக்கிரகப் பிரதிஷ்டை

செல்லத்துரை சுவாமிகள் 1992 ஆம் ஆண்டு சிதம்பரம் சென்றபோது பிரதிஷ்டை செய்வதற்குரிய யோகர் சுவாமிகளின் திருவுருவத்தைச் செய்து தரக்கூடிய

ஸ்தபதியொருவரைக் கண்டறிந்தார். கூடிய விரைவில் அப்புனித காரியம் கைகூடியது. தருமபூசணம் இரத்தினசாமிச் செட்டியாரின் இளைய புதல்வர் திருநாவுக்கரசுவும், மாசிலாமணி ஐயாவும் அவ்விக்கிரகத்தை 1994 இல் இலங்கையின் செங்கலடி சிவதொண்டனுக்குக் கொண்டு வந்து சேர்த்தனர். இதுவரை காலமும் நிழற்பட உருவில் வழிபட்டு வரப்பட்ட யோகர் சுவாமிகளின் திருவுருவம் செங்கலடியில் அழகிய தங்கப் பொம்மை விக்கிரக வடிவில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. மூன்று ஆண்டுகள் கழித்து 1997 இல் யாழ்ப்பாணத்திலும் இன்னோர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு இயற்றப்பட்டு வருகிறது.

## சிவ சிந்தனை

செல்லத்துரை சுவாமிகள் அவ்வப்போது **சிவ தொண்டன்** ஏட்டில் வெளியிட்ட பாடல்கள் உண்மையும், உயிர்ப்பும் உடையவை. அவற்றையும், அவரெழுதிய சில உரைநடைக் குறிப்புகளையும், மேலும் சுவாமிகளின் வரலாற்றையும் இணைத்து உயரிய இறைபணியாகச் **சிவ சிந்தனை** என்னும் நூலினைச் சிவதொண்டன் சபையினர் யோகர் சுவாமிகளின் குருபூசைத் தினமான 2006 பங்குனி ஆயிலிய நாளில் வெளியிட்டுள்ளனர். இதில் குரு தோத்திரம் (38), நற்சிந்தனை நலம் (39), சிவத்துதி (8), திருத்தலம் (15), சிவதொண்டன் வாழ்த்து (03), காப்பு (01), தையல் நாயகித் தாயே (01) எனும் பிரிவுகளில் 103 அருட்பனுவல்கள் அமைந்துள்ளன. அதனுடன் இறையியல் சார்ந்த பதினொரு சிறிய உரைநடைப் பகுதிகளும் காணப்படுகின்றன. இவற்றுள் அடங்காத சுவாமிகளின் அருளுரைகளும் எழுத்துக்களும் நிறையவே உள. "இன்னமும் ஒருதரம் பார்க்க வேண்டும்" எனும் பாடலானது, சிவ வடிவமாகவே தமது குருநாதர் யோகர் சுவாமிகளைக் காண விளையும் பேரின்ப வெட்கை அனுபவத்தை இசைப் பாடலாக ஊனினை உருக்கி உள் ளொளி பெருக்குமாறு விளங்குவதாகும். எதுகுலகாம்போதி இராகத்தில் ஆதி தாளத்துடன் இணைந்து பாடத் தக்கது மாகும். **சிவதொண்டன்** ஏப்பிரல் மாத இதழின் முதற் பக்கத்தில் வெளிவந்தது.

### பல்லவி

இன்னமு மொருதரம் பார்க்க வேண்டும்
என்றிச்சை கொள்ளு தென் மனம்
(இன்னமும்)

### அனுபல்லவி

பொன்னொளிர் சோதி பூரணக் காட்சியை
என்னகந் தனிலெழும் ஓம்இசை யமுதினை
(இன்னமும்)

### சரணங்கள்

கண்டவர் மகிழ்ந்திடும் கதிர்சடைக் கற்றையும்
கனிவுட னருள்மொழி கண்ணிணைப் போதையும்
தொண்டர்கள் சூழ்ந்திடும் சுந்தர நாதனைத்
தூயவர் ஏத்திடும் சோதி சொரூபனை
(இன்னமும்)

அண்டரு மறியாத அற்புத நடனனை
ஆனந்தத் தேன்சொரி அம்புய பாதனை
கொண்டலே போன்றருள் கொடை மடந்தன்னை
கொழும்புத் துறையுறை குருமணி யோகனை
(இன்னமும்)

எளிமையான சொல்லாட்சி, இசைத் தமிழாட்சி, அணிச்சிறப்பு, அருட்சிறப்பு, குருபக்தி, இறைபக்தி, ஓசை நயம், உண்மைப் பலம் நிறைந்த திருவருட் கனியாக இப் பாடல் தித்திக்கிறது.

மணிவாசகப் பெருமானைத் திருப்பெருந்துறைக் குருந்தரமர நீழலிற் குருவாய் வந்து ஆட்கொண்ட புண்ணியனைப்போலத் தம்மையும் தேடிவந்து திருவருள் தந்து ஆட்கொண்ட குருநாதனைச் செல்லத்துரை சுவாமிகள் நன்றிப் பெருக்கோடு **கொழும்புத் துறையிற் குருவாகிவந்து தொழுதுய்யச் செய்தாய் துணை** என்றும், **கலம்பக நாதனாய் வந்தான் நயந்து** என்றும், **கீர்த்திசேர் கேதாரக் கேடில் திருப்பதியில் பூர்த்தியில் தந்தாய் புகல்**

என்றும், **தேனுறை செய்ய மலர்ப்பாதம் தேயவே தேடியெனை உய்ய உவந்தாய் அருள்** என்றும் பாடியுள்ளார்.

**நல்லூரிற் செல்லப்பன் நல்லருள்செய் தாட்கொண்ட**
**செல்வச் சிவயோக நாதனே – அல்லாடும்**
**கன்மனத் தேனைக் கரைத்தாண் டருள்செய்தாய்**
**என்மனத் தென்றும் இருந்து**

இப்பாடல் **எழுத்திற் கடங்காதிது** எனுந் தலைப்பில் எழுதப்பட்ட ஏழு வெண்பாக்களில் இரண்டாவது.

**அன்னையினும் சால அடியேற்கு அருள்செய்த**
**மன்னவனே யோக மறையவனே – உன்னைப்போல்**
**பச்சைப் படிபேசிப் பாரோர்க்கு அருள் செய்வார்**
**இச்சகத்தில் யார்வே றுளர்?**

இதுவொரு தனிவெண்பா. தமது குருநாதரை எண்ணிக் கசிந்துருகும் செல்லத்துரை சுவாமியின் ஆத்மீக அலறல். இன்னோர் பாடலில்,

**வழுக்கி வழுக்கிச் சென்றவென் மனத்தை**
**இழுத்து இழுத்து இரட்சித்த யோகனே**

என்கிறார்.

**செல்வன் சிவயோகன் தந்த மருந்து**
**சிவசிவ சிவசிவ என்னும் மருந்து**
**நல்லவர் நாவினில் நயக்கும் மருந்து**
**நானெனு மாணவம் நீக்கும் மருந்து**

எனக் **குருமருந்து** பற்றிக் கூறும் சுவாமிகள், **அன்பிலார்போல அடியவரைக் காய்ந்து பெருகும் நன்மை நயந்தருளும் நாதனே** என்று தமது குருநாதரின் நடத்தையை நவில்கின்றார்.

**ஓயாது உழலும் மனமொடுங்கிச் சாந்தமுறத்**
**தாயாக வந்தெமக்குக் காட்டிவைத்த சற்குருவே**

எனச் சொல்லியும்,

**செல்வச் சிவயோகன்**
**சீரார் திருவடியை**
**அல்லும் பகலுமேத்தத் – திருவே**
**ஆனந்த மாகுமடி**

என்று கிளிக்கண்ணி போலவும் பாடிப் பரவசங் கொள்கிறார். சுவாமிகளின் குருநாதர் பற்றிய பாடல்களில் சிகரமாய் நின்றொளிர்வது **யோக ஒளி** எனுந் தலைப்பிலான இரு பாடல்களுமாகும்.

**உலகமெங்கும் ஓங்கிவளர் தூயவொளி**
**உள்ளங்கள் மலரவைக்கும் உண்மையொளி**
**அலகில்பே ரறிஞர்கள் ஆயுமொளி**
**அல்லும் பகலும் நீக்குமொளி**
**பல்கலைகள் ஆகமங்கள் பயிலுமொளி**
**பக்தர்களும் தேடியெங்கும் பரவுமொளி**
**நலமனைத்தும் நமக்கருளும் ஞானவொளி**
**ஞாலமதில் உருவான யோகவொளியே!**

**இல்லையென்று சொல்லாமல் ஈயுமொளி**
**இரவிமதி யாவுமாய் விளங்குமொளி**
**கல்லைநிகர் கடிமனதைக் கரைத்தவொளி**
**கருணையே வடிவான கவினாரொளி**
**தொல்லைவினை போகவருள் சொரியுமொளி**
**தோன்றாத் துணையாகத் தொடருமொளி**
**நல்லைநகர் வீதிநடஞ் செய்தவொளி**
**நமையாண்ட நலம்பெருகு யோகவொளியே!**

கல்மனதையும் கரையச் செய்யும், பொருளுணர்ந்து பாடச் செய்யும் எளிய சொற்களால் இயன்ற பாடல்கள் இவை. யோக முனிவரிடம் தமக்குக் கிடைத்த இறவாப் பேரின்ப அனுபவத்தை இரங்கியமுது, வியந்து

போற்றி எண்ண அலைகளாக எடுத்துக் காட்டியுள்ளார் செல்லத்துரைச் சுவாமிகள். இன்னொரு பாடலில்,

**வன்பினால் மதியிழந்து – சிவமே**
**வையத்தி லாழ்ந்தவெம்மை**
**அன்பினால் அடித்தடித்துச் – சிவமே**
**அகலா தடிமை கொண்டாய்**

என்று தன்னை அன்பினால் ஆட் கொண்ட மகத்துவத்தைப் பாடியுள்ளார்.

**நற்சிந் தனைதனை நயந்தாரும் நல்லவர்**
**நற்சிந் தனைதனை வியந்தாரும் நல்லவர்**
**நற்சிந் தனைகற் றுயர்ந்தாரும் நல்லவர்**
**நற்சிந் தனைசெய் யாவரும் நல்லவரே**

நற்சிந்தனைப் பாடல்கள் பற்றிய பரவசம் இப்பாடல்களாகும்.

சித்தர்களின் செயற்பாடுகள் சாமானியரால் புரிந்து கொள்ள முடியாதவை. யோகர் சுவாமிகள் அதிகளவில் சித்து விளையாட்டுக்களில் ஈடுபடவில்லை. ஆனால் அவரது செயல்கள் மாறுபாடானவை. இனிக்கப் பேசுவார்; அதே வேளை கடிந்தும் பேசுவார். மறைமுகமான சிவானுபவங் களைத் தமது சீடர்கள் பெறுவதற்காக அவரது நடத்தைக் கோலங்கள் நல்லவையாகவும் இருக்கும்; அவர்களை வருத்துவதாகவும் காணப்படும். இத்தகைய இயல்பினரான குருநாதர் பற்றிச் செல்லத்துரை சுவாமிகள் பாடிய வெண்பா வருமாறு;

**கள்ளம் கபடம் கடுஞ்சொல் கரந்துறையும்**
**உள்ளம் உனதடியை உன்னவே – வள்ளலே**
**மெல்ல மெல்லவாக மேன்மையுறச் செய்தேநீ**
**அள்ளிச் சொரிந்தாய் அருள்**

**நாம் என்றும் உள்ளோம்** என்னும் அருள் வாக்கினைத் தமது சீடருக்கு அருளியவர் யோகர்

சுவாமி. அதனை நினைவிலிருத்திச் சீடரும் சிவதொண்டனில் கட்டுரையும், கவிதையும் எழுதினார்.

**நாமென்று முள்ளோமென்று**
**நாதன் நவின்றமொழி**
**நாம்மறந்து போவோமெடி! – கிளியே**
**நல்லூரான் தஞ்சமெடி!**

குருவின் நற்சிந்தனைப் பாடலைப் பின்பற்றி எழுதியது இதுவாகும்.

**மருட்டியும் வெருட்டியுமென்**
**மயக்கந் தெளியவைத்த**
**அருட்சிவ யோகன்கழல் – கிளியே**
**அகத்தி லிருத்திடடி!**

கிளிக்கண்ணியாக அமைந்த 17 பாடல்கள் இப்பகுதியில் உள்ளன. மேலும் "சோதி ஒளிக்குள்ளே தூங்குவதும் எக்காலம்" என்னும் தலைப்பிலான ஈரடிகள் கொண்ட 16 பாடல்கள் நினைக்குந்தோறும், பாடுந்தோறும் நெக்குருகச் செய்பவை; சோதியனுபவத்தைச் சுவையாகத் தருபவை; தமது குருவின் ஒளியில் பிரகாசித்த சீடரின் ஏக்கங்களைப் பிரதிபலிப்பவை.

**அப்படியே யுள்ளதென்றும் ஆரறிய வல்லாரென்றும்**
**எப்பவோ முடிந்ததென்றும் ஏனிந்தப் பாடென்றும்**
**செப்பித் திரிந்தசிவ யோகன் திருவடியைத்**
**தப்பாது சார்ந்துநாம் சலிப்பறித லெக்காலம்?**

திருவடிக் கலப்பினை எண்ணி ஏங்கும் பக்தனின் உள்ளக்கிடக்கை இதில் தெரிகிறது. செல்லத்துரை சுவாமிகளின் சிந்தனைகள் பாடல்களாக விரிகின்றன.

**"செல்வன் திருவடியைச் சேருவது மெக்காலம்"**

**"ஓயாக் கவலையினால் உழலும் உளமொடுங்கி**
**மாயாத வின்பநீட்டை மன்னிடுத லெக்காலம்?"**

**"சிவதொண்டு செய்துநீ திருவடிசேர்க வென்ற**
**சிவதொண்டன் திருவடியைச் சேருவது மெக்காலம்?"**

**"நாமென்று முள்ளோம் நாளும் நினையென்ற**
**கோமகன்றன் பாதம் கூடுவது மெக்காலம்?"**

**"மனத்தை மடக்கி மலரடிக்கீழ்ச் சேவைசெய்யும்**
**இனத்தை யான்கூடி இன்புறுவ தெக்காலம்?"**

இவ்வாறெல்லாம் பல பாடல்களில் தமது சற்குருவானவரின் திருவடிகளை எண்ணியெண்ணி, இரங்கியிரங்கி, அழுதழுது, அரற்றியரற்றி ஆனந்தமும் துக்கமுமாகக் கழிவிரக்கப்பட்டு நிற்கிறார் செல்லத்துரை யென்னும் சிவதொண்டர். நல்லூர், செல்வச் சந்நிதி, கதிர்காமம், சித்தாண்டி, திருக்கோணாசலம், தில்லைச் சிதம்பரம் முதலான இடங்களிலுள்ள திருத்தலங்களையும், அங்கு எழுந்தருளியுள்ள கடவுளர்களையும் பாடிப் பரவச முற்ற பாடல்களும் **சிவசிந்தனை** நூலில் அடங்கியுள்ளன.

**"சித்தாண்டி வேற்குமரன் திருவடிகள் முடிமீதில்**
**வைத்தாண்டி வாட்டமின்றி வளர்ந்திடுமே சிவதொண்டு"**

**"சந்நிதி யப்பனைச் சண்முக நாதனைப்**
**பன்னிரு கையனைப் பணிவார்க் கிடரிலை"**

**"உனை நினைந் தடியேன் ஓயாதுருகிட**
**உன்னரு ளைத்தா கோணா சலா"**

எனவரும் பாடலடிகள் குறிப்பிடத் தக்கனவாகும்.

**நல்லைநகர் வீதியிலே**
**நாளும் வணங்கிவந்தால்**
**சொல்லமுடி யாதவின்பம் – சிவமே**
**சுரந்து வழிந்திடுமே**

இது நல்லூர் பற்றிய பாடலாகும். செல்லத்துரை சுவாமிகளின் பாடல்கள் இறையன்பின், குருவன்பின் அடித்தளத்திலானவை. உள்ளத்தின் ஊற்றாக விளங்குபவை. எளிய இசைப் பாடல்களாகத் திகழ்பவை. சிவ சிந்தனையைத் தூண்டுபவை. வாழ்வின் பொருளை எடுத்துக்காட்டுபவை.

சுவாமிகள் காலந்தோறும் சிவதொண்டன் ஏட்டுக்கு எழுதிய கட்டுரைகள் பல. சிவசிந்தனை நூலிலும் அவரது சிறிய சில கட்டுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இறைவனிருக்கின்றான்; அதனால் நாம் பயப்படத் தேவையில்லை என்கிறார் ஒரு கட்டுரையில். சிவபெருமானே உண்மை அன்பை அருளுக என்றும், நாம் நம்மை முழுவதுமாக இறைவனிடம் ஒப்புக்கொடுக்க வேண்டுமென்றும், இறைவனை அகத்துள்ளே தேடு என்றும், உயிருக்கு உயிராய் இருக்கும் சிவனைச் சும்மா இருந்துபார் என்றும் சுவாமிகள் கூறுவது சைவசித்தாந்தக் கருத்துக்களின் அடிப்படையிலானதாகும். பேரின்பமென்பது ஆன்மாவானது இறைவனோடு இரண்டறக் கலத்தல் ஆகும் என்பதையும், எம்மை விட்டு நீங்காச் சோதி உளதாயின் எமக்கொரு குறையும் இனி இல்லையென்றும், எல்லாம் நன்மோன நிறைவேயென்றும் கூறுகிறார். **ஆசை அறுமின்", "என் ஆசான்", "கடவுளை நாம் அளவிட முடியாது** ஆகிய தலைப்புகளிலும் சுவாமிகளின் அருளுரைகள் அமைந்துள்ளன.

செல்லத்துரை சுவாமிகளின் வாழ்வியல் 92 அகவைகளைக் கொண்டது. அதில் மாணவப் பருவம் 26 ஆண்டுகளையும், ஆசிரியப்பணி 25 ஆண்டுகளையும் கொண்டது. ஆசிரிய வாழ்வில் அரைவாசிக்காலம் தலைமையாசிரியப் பணியாகவும் மிளிர்ந்தது. ஆன்மீக நெறியினுள் அமிழ்த்தப் பட்ட காலங்கள் 52 ஆண்டுகளாகும் (1954 - 2006). சிவதொண்டன் நிலையத்தில் சேர்ந்தமை, 1959 இல் நிலையப் பொறுப்பினை ஏற்றமை, சிவதொண்டன் சபைப் பொருளாராகவும், பின்னர் தலைவராகவும் பணியிலிருந்தமை முதலியன இவற்றுள் அடங்கும். யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் 1954 - 1977 வரையும், 2002 - 2006 வரையுமாக 27 ஆண்டுகளும், செங்கலடி சிவதொண்டன் நிலையத்தில் 1977 - 2002 வரையுள்ள 25 ஆண்டுகளும் பணியாற்றும் வாய்ப்பு. இறையருளாலும், குருவருளாலும் அவருக்குக் கிட்டியது. தமது குருவானவரைப்போல சில சில சித்துகள் காட்டல், தெருத்தெருவாய் நடந்து திரிதல், முரண்பாடாகப் பேசுதல் முதலானவைகள் செல்லத்துரை சுவாமிகளிடம் காணப்படவில்லை. கருமமே கண்ணாயிருந்து தமது சிவப்பணியினை குருவின் ஆசீர்வாதத்துடன் மேற்கொண்டார். ஆசிரியப் பணியுடன் ஓரிடத்திலிருந்து தமது

சிவதொண்டை மேற்கொண்டார். தேவைப்பட்டபோது நல்லூர், செல்வச்சந்நிதி, கதிர்காமம், இந்தியத் திருத் தலங்கள், கிழக்கிலங்கைத் திருத்தலங்கள், சிவப்பணி நிலையங்கள், சைவக் குருகுலங்கள், சமயம்சார் நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்குச் சென்றுவந்தார். **சிவ தொண்டன்** ஏட்டின் வெளிவருகையைக் கவனித்ததுடன், அதில் பல்வேறு ஆன்மீக ஆக்கங்களையும் எழுதினார். ஏனைய வேளைகளில் தியானம், குருபூசை, விழாக்கள், புராணபடனம், உரையாற்றல், திருவடிபூசை, குருநாதர் சிந்தனை, ஆன்மீக அலசல், அன்பர்களுடன் உரையாடல் என்றவாறு செயற்பட்டார்.

எனவே யாழ்ப்பாணத்துச் சித்தர் பரம்பரை ஞானிகள் வரிசையில் சிறந்து விளங்கும் யோகர் சுவாமிகளின் அணுக்கத் தொண்டராகவும், சீடராகவும் விளங்கியதுடன், அவர் தாபித்த சிவதொண்டன் நிலையப் பணிகளையும் முன்னெடுத்த கருமயோகியாகச் செல்லத்துரை சுவாமிகள் விளங்கினார். யாழ்ப்பாண ஆன்மீக வரலாற்றிலும், இலங்கை இந்துசமய வரலாற்றிலும் அவரது பெயர் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அனுபூதிச் செல்வ ராக, ஆத்மீக ஞானியாக, கர்மவீரராக, சமயத் துறவியாகப் படிப்படியாக வளர்ச்சிபெற்ற சுவாமிகளின் நாமம் என்றும் நிலைத்து நிற்கும். எங்கள் சமூகம் விடிவுபெறத் துணை நிற்கும். சமயத் துறையில் குரு - சீட உறவுக்கு எடுத்துக் காட்டாகக் காணப்படும். இன்று செல்லத்துரை சுவாமிகள் சமாதியடைந்து பன்னிரண்டாண்டுகள் ஆகிவிட்டன. செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் ஆகிய இருவரு டன் இவரையும் சேர்த்து மூவரையும் ஒருவராகக் கண்டு வழிபாடியற்றும் வல்லமை நமக்குக் கிட்டியிருக்கிறது. சுவாமிகள் எமது முழுநாட்டுக்கும் உரித்தான தேசிய ஆன்மீக வாதியாவார். அவரது ஆன்மீக வழிகாட்டலைப் பின்பற்றி நாமும் நடந்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, இம்மானிடப் பிறவியின் நோக்கத்தை நிறைவு செய்வோமாக.

**தவயோக முனிவரின் தாளிணைச் சரணடைந்த**
**சிவயோக செல்லத்துரைச் சுவாமிகள் – நவவுலகின்**
**ஆசிரியத் தெய்வமாய் ஆன்மீகத் துறவியாய்ப்**
**பேசரிய பேறுற்றபெம் மான்**

# அருணாசல அக்ஷ ரமண மாலை

## காப்பு

அருணாசல வரற்கேற்ற அக்ஷ ரமண மாலைசாற்றக்
கருணாகர கணபதியே கரமருளிக் காப்பாயே!

## நூல்

அருணா சலசிவ அருணா சலசிவ அருணா சலசிவ அருணாசலா
அருணா சலசிவ அருணா சலசிவ அருணா சலசிவ அருணாசலா

1. அருணாசலமென அகமே நினைப்பவர்
அகத்தைவேர் அறுப்பாய் அருணாசலா.

2. அழகுசுந்தரம்போல் அகமும் நீயும்
உற்றபின்னமாய் இருப்போம் அருணாசலா.

3. அகம்புகுந்து ஈர்த்துன் அககுகை சிறையா
அமர்வித்ததென்கொல் அருணாசலா.

4. ஆருக்காவெனை ஆண்டனை அகற்றிடில்
அகிலம் பழித்திடும் அருணாசலா.

5. இப்பழிதப்பு உனையே நினைப்பித்தாய்
இனியார் விடுவார் அருணாசலா.

6. ஈன்றிடும் அன்னையிற் பெரிதருள் புரிவோய்
இதுவோ உனதருள் அருணாசலா.

7. உனையே மாற்றியோடாது உளத்தின்மேல்
உறுதியாய் இருப்பாய் அருணாசலா.

8. ஊர்சுற்றுஉளம் விடாது உனைக்கண்டு அடங்கிட
உன்னழகைக் காட்டு அருணாசலா.

9. எனையழித்திப்போ எனைக்கலவாவிடில்
இதுவோ ஆண்மை அருணாசலா.

10. ஏனிந்த உறக்கம் எனைப்பிறரிழுக்க
இதுவுனக்கழகோ அருணாசலா.

11. ஐம்புலக் கள்வர் அகத்தினிற் புகும்போது
அகத்தில்நீ இலையோ அருணாசலா.

12. ஒருவனாம் உன்னை ஒளித்தெவர் வருவார்
உன் சூதேயிது அருணாசலா.

13. ஓங்காரப்பொருள் ஒப்புயர்வில்லோ
உனை யாரறிவார் அருணாசலா.

14. ஔவைபோல் எனக்குன் அருளைத் தந்து எனை
ஆளுவது உன்கடன் அருணாசலா.

15. கண்ணுக்கு கண்ணாய்க் கண்ணின்றிக் காணுனை
காணுவது எவர் பார் அருணாசலா.

16. காந்தம் இரும்புபோல் கவர்ந்தெனை விடாமல்
கலந்து என்னோடிருப்பாய் அருணாசலா.

17. கிரியுருவாகிய கிருபைக்கடலே
கிருபைகூர்ந்து அருளுவாய் அருணாசலா.

18. கீழ்மேலெங்கும் கிளரொளி மணியென்
கீழ்மையைப் பாழ்செய் அருணாசலா.

19. குற்றம் முற்றறுத்தெனை குணமாய்ப் பணித்தாள்
குருவுருவாய் ஒளி அருணாசலா.

20. கூர்வாட் கண்ணியர் கொடுமையிற் படாதருள்
கூர்ந்தெனைச் சேர்த்தருள் அருணாசலா.

21. கெஞ்சியும் வஞ்சியாய்க் கொஞ்சமும் இரங்கிலை
அஞ்சலென்றே அருள் அருணாசலா.

22. கேளாதளிக்கும் உன் கேடில் புகழை
கேடு செய்யாதருள் அருணாசலா.

23. கையினிற் கனியுன் மெய்ரசங்கொண்டு
உவகைவெறிகொள அருள் அருணாசலா.

24. கொடியிட்டு அடியரைக்கொல் உனைக்கட்டிக்
கொண்டெங்கன் வாழ்வேன் அருணாசலா.

25. கோபமில் குணத்தோய் குறியாய் எனைக்கொளக்
குறையென் செய்தேன் அருணாசலா.

26. கௌதமர் போற்றும் கருணை மாமலையே
கடைக்கணித்தாள்வாய் அருணாசலா.

27. சகலமும் விழுங்கும் கதிரொளியினமன
சலசமலர்த்தியிடு அருணாசலா .

28. சாப்பாடுன்னைச் சார்ந்துண வாயான்
சாந்தமாய்ப் போவன் அருணாசலா.

29. சித்தம் குளிரக் கதிரத்தம் வைத்த அமுத
வாயைத்திற அருள்மதி அருணாசலா.

30. சீரையழித்து நீர்வாணமாய்ச் செய்து அருட்
சீரை அளித்தருள் அருணாசலா.

31. சுகக்கடல் பொங்கச் சொல்லுணர் அடங்கச்
சும்மா பொருந்திடம் அருணாசலா.

32. சூது செய்தென்னைச் சோதியாது இனியுன்
சோதியுருக்காட்டு அருணாசலா.

33. செப்படிவித்தை கற்று இப்படி மயக்குவிட்டு
உருப்படுவித்தை காட்டு அருணாசலா.

34. சேராயெனின் மெய்நீராய் உருகி கண்ணீ
ரால் அழிவேன் அருள் அருணாசலா.

35. சையெனத்தள்ளிற் செய்வினை சுடுமலால்
உய்வகை ஏதுரை அருணாசலா.

36. சொல்லது சொலிநீ சொல்லற நில்லென்று
சும்மா இருந்தாய் அருணாசலா.

37. சோம்பியாய்ச் சும்மா சுகம் உண்டு உறங்கிடிற்
சொல் வேறென்கதி அருணாசலா.

38. சௌரியம் காட்டினை சழக்கற்றதென்றே
சலியாதிருந்தாய் அருணாசலா.

39. ஞமலியிற்கேடா நானென் உறுதியால்
நாடி நின் உறுவேன் அருணாசலா.

40. ஞானமில்லாது உன் ஆசையால் தளர்வற
ஞானம் தெரித்தருள் அருணாசலா.

41. ஞிமிறுபோல் நீயும் மலர்ந்திலை என்றே
நேர்நின்றனை என் அருணாசலா.

42. தத்துவம் தெரியா தத்தனை உற்றாய்
தத்துவமிதுவென் அருணாசலா.

43. தானேதானே தத்துவம் இதனைத்
தானே காட்டுவாய் அருணாசலா.

44. திரும்பி அகந்தனைத் தினம் அகக்கண்காண்டு
எரியும் என்றனையென் அருணாசலா.

45. தீரமில் அகத்தில் தேடி உந்தனை யான்
திரும்ப உற்றேன் அருள் அருணாசலா.

46. துப்பறிவில்லா இப்பிறப்பு என்பயன்
ஒப்பிடவாயேன் அருணாசலா.

47. தூய்மனமொழியர் தோயும் உன்மெய்யகம்
தோயவே அருள்என் அருணாசலா.

48. தெய்வமென்று உன்னைச் சாரவே என்னைச்
சேரவொழித்தாய் அருணாசலா.

49. தேடாதுற்ற நற்றிருவருள் நிதி அகத்து
இயக்கந் தீர்த்தருள் அருணாசலா.

50. தைரியமோடு முன்மெய்யகம் நாடயான்
நட்டழிந்தேன் அருள் அருணாசலா.

51. தொட்டருட் கைமெய் கட்டிடாயெனில் யான்
நட்டமாவேன் அருள் அருணாசலா.

52. தோடமினீ யகத்தோடு ஒன்றி என்றும்
சந்தோடமொன்றிட அருள் அருணாசலா.

53. நகைக்கிடமிலை நின்நாடியஎனை அருள்
நகையிட்டுப்பார் நீ அருணாசலா.

54. நாணிலை நாடிட நானாய் ஒன்றிநீ
தானுவா நின்றனை அருணாசலா.

55. நின்னெரி எரித்துஎனை நீறாக்கிடுமுன்
நின்னருள் மழைபொழி அருணாசலா.

56. நீநான் அறப்புலி நிதங்களி மயமாய்
நின்றிடும் நிலையருள் அருணாசலா.

57. நுண்ணுரு உனையான் விண்ணுரு நண்ணிட
வெண்ணலை யிறுமென்று அருணாசலா.

58. நூலறிவு அறியாப் பேதையன் என்றன்
மாலறிவு அறுத்தருள் அருணாசலா.

59. நெக்கு நெக்கு உருகியான் புக்கிட உனைப்புக
நக்கனா நின்றனை அருணாசலா.

60. நேசமில் எனக்குன் ஆசையைக் காட்டிநீ
மோசம் செய்யாதருள் அருணாசலா.

61. நைந்தழி கனியான் நலனிலை பதத்தில்
நாடியுட் கொள்நலம் அருணாசலா.

62. நொந்திடாது உன்றனைத் தந்தெனைக் கொண்டிலை
அந்தகநீ எனக்கு அருணாசலா.

63. நோக்கியே கருதிமெய் தாக்கியே பக்குவம்
ஆக்கிநீ ஆண்டருள் அருணாசலா.

64. பற்றிமால் விடந்தலை உற்றிறு முனமருள்
பற்றிட அருள்புரி அருணாசலா.

65. பார்த்தருண் மாலறப் பார்த்திலை எனின் அருள்
பாருனக் கார்சொல்வர் அருணாசலா.

66. பித்துவிட்டு உனைநேர் பித்தனாக்கினை அருள்
பித்தம் தெளிமருந்து அருணாசலா.

67. பீதியில் உனைச்சார் பீதியில் எனைச்சேர்
பீதி உன்றனக்கேன் அருணாசலா.

68. புல்லறி வேதுரை நல்லறி வேதுரை
புல்லிடவே அருள் அருணாசலா.

69. பூமண மாமனம் பூரண மணங்கொளப்
பூரண மணமருள் அருணாசலா.

70. பெயர் நினைத்திடவே பிடித்திழுத்தனை உன்
பெருமை யாரறிவார் அருணாசலா.

71. பேய்த்தனம் விடவிடாப் பேயாப் பிடித்தெனைப்
பேயனாக்கினை என் அருணாசலா.

72. பைங்கொடியா நான் பற்றின்றி வாடாமல்
பற்றுக்கோடாய்க் கா அருணாசலா.

73. பொடியால் மயக்கி என் போதத்தைப் பறித்துன்
போதத்தைக் காட்டினை அருணாசலா.

74. போக்கும் வரவுமில் பொதுவெளியினில் அருட்
போராட்டம் காட்டு அருணாசலா.

75. பௌதிகமாம் உடற் பற்றற்று நாளும் உன்
பவுசு கண்டுற அருள் அருணாசலா.

76. மலை மருந்திடநீ மலைத்திடவோ அருள்
மலை மருந்தாய் ஒளிர் அருணாசலா.

77. மானங் கொண்டுறுபவர் மானத்தை அழித்து
அபிமானமில்லாது ஒளிர் அருணாசலா.

78. மிஞ்சிடில் கெஞ்சிடும் கொஞ்ச வறிவனியான்
வஞ்சியாது அருள் எனை அருணாசலா.

79. மீகாமன் இல்லாமல் மாகாற்றலை கலம்
ஆகாமல் காத்தருள் அருணாசலா.

80. முடியடி காணா முடிவிடுத்தனை நேர்
முடிவிடக் கடனிலை அருணாசலா.

81. மூக்கிலன் முன்காட்டு முகுரம் ஆகாதெனைத்
தூக்கி அணைந்தருள் அருணாசலா.

82. மெய்யகத்தின் மன மென்மலர் அணையினால்
மெய்கலந்திட அருள் அருணாசலா.

83. மேன்மேல் தாழ்ந்திடு மெல்லியர்ச் சேர்ந்துநீ
மேன்மையுற்றனை என் அருணாசலா.

84. மைமயன் ஈத்தருள் மையினால் உனதுண்மை
வசமாக்கினை அருணாசலா.

85. மொட்டை அடித்தெனை வெட்ட வெளியில்நீ
நட்டமாடினை என் அருணாசலா.

86. மோகம் தவிர்த்துன் மோகமா வைத்தும் என்
மோகந் தீராய் என் அருணாசலா.

87. மௌனியாய்க் கற்போன் மலராதிருந்தான்
மௌனம் இதாமோ அருணாசலா.

88. யவனென் வாயின் மண்ணினை அட்டி
என்பிழைப்பு பொழித்த அருணாசலா.

89. யாரும் அறியாது என் மதியினை மருட்டி
எவர்கொளை கொண்ட அருணாசலா.

90. ரமணன் என்று உரைத்தேன் ரோசம் கொளாதெனை
ரமித்திடச் செயவா அருணாசலா.

91. ராப்பகலில்லா வெறுவெளி வீட்டில்
ரமித்திடுவோம் வா அருணாசலா.

92. லட்சியம் வைத்தருள் அஸ்திரம் விட்டெனைப்
பட்சித்தாய் பிராணனோடு அருணாசலா.

93. லாபநீ இகபர லாபமில் எனையுற்று
லாபமென்று உற்றனை அருணாசலா.

94. வரும்படி சொலிலை வந்தென் படியளா
வருந்திடுன் தலைவிதி அருணாசலா.

95. வாவென் றகம்புக்குன் வாழ்வருள் என்றே என்
வாழ்விழந்தேன் அருள் அருணாசலா.

96. விட்டிடில் கட்டமாம் விட்டிடா துனையுயிர்
விட்டிட அருள்புரி அருணாசலா.

97. வீடுவிட் டீர்த்துள வீடுபுக்குப் பையவுன்
வீடுகாட்டினை அருள் அருணாசலா.

98. வெளிவிட்டேன் உன்செயல் வெறுத்திடா துன்னருள்
வெளிவிட்டெனைக்கா அருணாசலா.

99. வேதாந்தத்தே வேறற விளங்கும்
வேதப்பொருள் அருள் அருணாசலா.

100. வைதலை வாழ்த்தா வைத்தருட் குடியா
வைத்தெனை விடாதருள் அருணாசலா.

101. அம்பு வில் ஆலிபோல் அன்புரு வுனிலெனை
அன்பாக் கரைத்தருள் அருணாசலா.

102. அருணைஎன்று எண்ணயான் அருட்கண்ணி யட்டேனுன்
அருள்வலை தப்புமோ அருணாசலா.

103. சிந்தித் தருள்படச் சிலந்திபோல் கட்டிச்
சிறையிட் டுண்டனை அருணாசலா.

104. அன்போடுன் நாமங்கேள் அன்பர்தம் அன்பருக்
கன்பனாய் இடவருள் அருணாசலா.

105. என்போலுந் தீனரை இன்புறக் காத்துநீ
எந்நாளும் வாழ்ந்தருள் அருணாசலா.

106. என்புருகு அன்பர்தம் இன்சொற்கொள் செவியுமென்
புன்மொழி கொளவருள் அருணாசலா.


107. பொறுமையாம் பூதர புன்சொலை நன்சொலாப்
பொறுத்தருள் இஷ்டம்பின் அருணாசலா.

108. மாலை அளித்தருணாசல ரமணவென்
மாலை அணிந்தருள் அருணாசலா.

அருணா சலசிவ அருணா சலசிவ அருணா சலசிவ அருணாசலா
அருணா சலசிவ அருணா சலசிவ அருணா சலசிவ அருணாசலா


அருணா சலம் வாழி யன்பர் களும்வாழி
அக்ஷர மணமாலை வாழி.






தவத்திரு செல்லத்துரை சுவாமிகள்


உ
சிவமயம்




ஸ்ரீ ரமண மகரிகூஷி



தவத்திரு செல்லப்பா சுவாமிகள்



தவத்திரு யோக சுவாமிகள்








கொழும்புத்துறை யோகர் சுவாமி ஆச்சிரமம்








சிவதொண்டன் நிலையம், யாழ்ப்பாணம்.




சிவதொண்டன் நிலையம், செங்கலடி.